Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
• INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 பாலம் 10 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2007



## நிதியமும் பணச்சந்தையும்

02



## மாமல்லபுரம்

13

6ஆவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா செப்ரெம்பர் 16, 2007 படைப்புக்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் ஆவணி 15, 2007
416-857-6406 / 416-450-6833

# இலங்கை மீதான உலகநாடுகளின் தடை தொடர்கின்றது

புலிகளை உலகம் தடை செய்த காலம் போய் இன்று இலங்கை மீதான தடைகள் தொடருகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் சிறுபான்மைத் தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தவறியமை மற்றும் மனித உரிமைகளைக்கு புறம்பான சட்டவிரோதப் படுகொலைகளை நிறுத்துவதற்குத் தவறியதன் காரணமாக உலக நெருக்கடிக்குள் மூழ்கி உள்ளது. முன்பொரு காலம் தென் ஆபிரிக்கா மீதான தடையை உலகம் ஏற்படுத்தியது போல இலங்கை மீதான தடைகள் தொடருமா என்ற கேள்வி இப்போ எழுந்துள்ளது.

ஜேர்மனைத் தொடர்ந்து, அமெரிக்காவும் பிரித்தானியாவும் சிறி லங்காவுக்கான தமது நிதி உதவியில் ஒரு பகுதியைத் தடுத்து வைத்திருக்கும் அதேவேளையில் மேலும் பல நாடுகள் இதனைப் பின்பற்றலாம் என்ற செய்தி வெளியாகி உள்ளது. இந்த விவகாரத்தில் ஜப்பான் தீவிரமாக மூக்கை நுழைத்துள்ளதாக தெரியவருகின்றது. சுவீடனும் இலங்கைக்கான நிதி உதவியை நிறுத்தப் போவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இலங்கைக்கான நிதி உதவியை மனித உரிமை விவகாரத்துடன் தொடர்புபடுத்துமாறு கோரும் மனித உரிமை ஆர்வலர்களுடன் ஜப்பான் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

சிறிலங்காவுக்கு ஜப்பானே அதிகளவு நிதி உதவிகளை வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா விவகாரத்தில் மேலும் அதிகளவு பங்களிப்பை வழங்குமாறு அனைத்துலக மனித உரிமை அமைப்பு ஜப்பானைக் கேட்டிருக்கின்றது.

சிறிலங்கா அரசு மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை கொடுக்கும் முன்னணிப் பங்களிப்பை ஜப்பான் மேற்கொள்ளும் என எதிர்பார்ப்பதாக அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் சமூகத்தின் கவலையை அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சரும் தன்னுடைய கொழும்புப் பயணத்தின் போது வெளிப்படுத்தியிருந்தார். அதே வேளை இலங்கை விவகாரத்துக்கென, விசேட தூதுவர் ஒருவரை அமெரிக்க அரசாங்கம் விரைவில் நியமிக்கலாம். இதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவும் உண்டு என்று ராஜாங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே சமயம் உலக அபிப்பிராயம் எதனையுமே இலங்கை அரசு செவிசாய்கவில்லை. எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்காக உள்ளது. வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுக்கு தாம் அடிபணிய மாட்டோம் என்று, வெளிநாடுகளை தொழுது வாழும் இலங்கை



அறிவித்துள்ளது. அத்தோடு தனது மனித உரிமை மீறல்களையும் அது தொடர்கின்றது.

தொடர்ச்சி 21ஆம் பக்கம்

Clarica நிறுவனம் Sun Life Financial நிதி நிறுவனமாக மாறுகிறது. மேலதிக விவரங்களுக்கு: Ajith Sabaratnam (Page - 05)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.




Sai Mortgage Center
• 0% Down Payment
• 1st, 2nd & 3rd Mortgages
• Self-Employed Programs
• Investment Properties
*Need Mortgage Agents*
Call 416-745-2378
Email- singcom2009@yahoo.ca

துரித பணமாற்றுச் சேவை
• 49 வருடங்கள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 16 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM™ Veedu Mortgages Inc.




வாழ்வு-வியாபாரம்-முதலீடு

HomeLife GTA Realty Inc., Brokerage
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

கனடாவின் ஐந்து பெரிய வங்கிகள் ஒன்றுடன் ஒன்று இணைவதற்கு இதுவரை காலமும் கனடிய அரசு ஒப்புதல் தரவில்லை. அவ்வாறு இல்லாமல் ஒப்புதல் தரவேண்டுமென்று முன்னாள் பிரதமர் பிரையன் மல்ரோனி கூறியுள்ளார். இப்போதே வங்கிகள், வாடிக்கையாளர்களிடம் அதிகமான சேவைக் கட்டணங்களை வசூலிக்கின்றன என்று ஒரு சாரார் குறை கூறுகின்றனர். ஐந்து வங்கிகள் உதாரணத்துக்கு மூன்றாகின்றன என்று வைத்துக்கொண்டால், அவற்றிற்கிடையேயான போட்டி குறைந்து, வாடிக்கையாளர் கட்டணங்கள் மேலும் உயரலாம் என்ற அச்சம் உள்ளது. ஆனால் மல்ரோனியின் வாதம் என்னவென்றால், உலக அரங்கில் அமெரிக்க வங்கிகளும், ஐரோப்பிய வங்கிகளும் மிகப்பெரியனவாக உள்ளன. அவற்றிற்கு இணையாக உலக அரங்கில் கனடிவங்கிகள் பெரிதாகவும், வலுவாகவும் இல்லையென்றால் ஓரங்கட்டப்படும் என்கிறார்.

பொதுவில் பார்க்கும்போது உலக மயமாக்கலில், அமெரிக்க நிறுவனங்களை விட, கனடிய நிறுவனங்கள் தான் உலக அரங்கில், பிறநாடுகளில் நிறுவனங்களை விலைக்கு வாங்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

பங்குச் சந்தையில் ஒவ்வொரு நாளும் நீங்கள் வெற்றியாளாராக இருக்க முடியாது. உங்கள் திறமை எதுவாக இருந்தாலும் பொதுவாக எட்டு வாரங்களாக மேல் நோக்கிச் சென்று கொண்டிருந்த அமெரிக்க பங்குச் சந்தை விலைகள் மே 10ஆம் திகதி வீழ்ச்சியடைந்தன. என்ன காரணம் சொல்லலாம். நல்ல செய்தி, கெட்ட செய்தி, அல்லது செய்தியே இன்மை. இவைதான் காரணங்களாக இருக்க முடியும். விலைவீழ்ச்சியை சதவீதத்தில் கணக்கிடும் போது மூன்றிலிருந்து ஐந்து சதவீதத்துக்குள் வருகின்றது. இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகச் சொல்லப்படுவது எதிர்பார்த்ததைவிட சில்லறை விற்பனை குறைவாக இருந்ததும், பொருளாதார வளர்ச்சி பற்றிய எண்கள் ஏமாற்றம் தருவதாக இருந்ததுமே காரணம் என்கிறார்கள். இந்த காலகட்டத்தில் கனடிய பங்குச் சந்தையில் விலைகள் ஏறுமுகமாகத்தானிருக்கின்றன.

பங்குகளை நிறுவனங்கள் மேலும் சிறிதாக்கும் போது (Stock Split) பொதுவில் அந்தப் பங்குகளின் விலைகள் பங்குச் சந்தையில் கூடுகின்றன. இதற்குப்பல உதாரணங்களைக் கூறலாம். இந்த விதிக்கு பொதுவில் விலக்காக இருப்பவை வங்கிகளின் பங்குகள். அவை சிறிதாக்கப்படும் போது கடந்த காலங்களில் சந்தையில் பெரிதாக ஒன்றும் விலை ஏற்றம் நிகழவில்லை. சிறுமுதலீட்டாளர்கள் என்ன செய்யலாம் என்றால் வேகமாக வளர்ந்து வரும், விற்பனை, இலாபம் இரண்டும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது. சந்தையில் எந்த நேரமும் விற்க வாய்ப்புள்ள, அதிக விலையுள்ள பங்குச் சந்தை பங்குகளில் நீண்ட காலத்துக்கு என முதலீடு செய்யலாம். அத்தகைய நிறுவனங்கள் தங்கள் பங்குகளை சிறிதாக்க முனையும் போது சிறு முதலீட்டாளர்கள் தங்கள் பங்குகளை நாளடைவில் விற்று நல்ல இலாபம் பெறலாம்.



காலங்கள் மாறுகின்றன. சூழ்நிலைகள் மாறுகின்றன. விதிகளும் மாறுகின்றன. மாறுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ப வீட்டுக்கடன்களையும் பெறவேண்டும். கனடாவில் இன்றைக்குத் தளர்த்தப்பட்டிருக்கும் வீட்டுக்கடன் விதிகளின்படி குறைந்த வருமானம் உடையோரும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிக அளவு கடன் பெறத் தகுதியுடையராகின்றனர். வீட்டுக்கடன் பொருட்களின் எண்ணிக்கையும் பத்து, பதினைந்து என்று அதிகரித்து விட்டது. இந்தச் சூழ்நிலையில் வட்டிவீதம் ஒன்றைமட்டும் பார்க்காமல் மற்றவற்றையும் பார்க்க வேண்டும். வீட்டை உரிய காலத்திற்கு முன்பே விற்கும் சூழ்நிலை வந்தால், கடனுக்கு அபாரதம் உண்டா? கையில் பணமிருந்தால் வீட்டுக்கடனுக்குக் கூட கட்டமுடியுமா? எவ்வளவு கட்டமுடியும். வருடத்துக்கு எவ்வளவு கூட கட்டலாம்? மாதத் தவணையை எவ்வளவு கூட கட்டலாம். ஏதோ சூழ்நிலையின் காரணமாக ஒரு மாதம் வீட்டுக் கடன்தவணையை கட்டவில்லை என்றால் என்னவாகும்? கடனை விரைவில் கட்டவோ, தாமதிக்கவோ வழிகள் உள்ளனவா? கடனுக்குக் கட்டிய பணத்தைத் தேவைப்பட்டால் திரும்பவும் குறைந்த வட்டியில் வாங்க வாய்ப்புண்டா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு ஆன விடைகளை நமது சூழ்நிலைக்கு ஏற்ப தெரிந்து கொண்டு கடனுக்கு ஆட்பட வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம். விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பது வாழ்க்கைக்கு ஆன விதிமட்டுமல்ல, அதுதான் கணிதமும் கூட.

இன்றைக்கு பிகான் ஸ்கோர் 650 (Becon Score) அல்லது அதற்கு மேலோ இருக்கும் பட்சத்தில், வருமானத்தைப் பொறுத்து வங்கிகள் வீடு மற்றும் இதரகடன்கள் 32 மற்றும் 40 சதவீதத்துக்குள் இருக்கின்றனவா என்று பார்த்து நூறுசதவீதம் வரை கடன் தரத் தயாராயிருக்கின்றன. கடன் வாங்குவது எப்படி சுலபமோ அதுபோல கடனைத் திருப்பி செலுத்தவில்லை என்றால் வீட்டிலிருந்து வெளியேற்றப்படுவதும் சுலபம் என்பதை கடன் வாங்குமுன் தெரிந்து கொள்ள வேண்டும். முன்னோர் சொன்னபடி திட்டமிட்டு, விரலுக்குகேற்ற வீக்கத்தோடு கடன் வாங்கினால் வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தனிப்பட்ட ஆலோசனைகளை இக்கட்டுரை ஆசிரியரிடம் பெறவிரும்பினால் தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்கோசியா வங்கி தொலைபேசி எண் - 416.439.3040 Ext 2008



**பெரி. முத்துராமன்**

# பிரான்ஸ் அதிபராக நிகொலஸ் சர்கோசி தெரிவு செய்யப்பட்டார்

பிரான்ஸ் நாட்டை தற்போது ஆளும் பழமைவாத கட்சியை சேர்ந்த நிகொலஸ் சர்கோசி (Nicolas Sarkozy) இந்நாட்டின் புதிய அதிபராக மே மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் 53 வீத வாக்குகளை பெற்று வெற்றியீட்டினார்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட பொதுவுடமைக்கட்சியை சேர்ந்த செகோலே ரோயல் (Segolene Royal) என்ற பெண்மணி 47 வீத வாக்குகளைப் பெற்றாலும் அவர் பிரான்ஸ் நாட்டில் முதன்முறையாக அதிபர் பதவிக்கு போட்டியிட்ட பெண் என வரலாற்றில் இடம் பெறுகிறார். 53 வயது செகோலே ரோயல் நான்கு பிள்ளைகளின் தாயார் ஆவர். நிகொலஸ் சர்கோசி பிரான்ஸ் நாட்டை ஆளப்போகும் முதலாவது புலம்பெயர்ந்த குடிவரவாளரின் மகன் என்ற பெருமையை பெறுகிறார். இவரது தந்தையார் ஹங்கேரி (Hungary) நாட்டில் இருந்து பிரான்ஸ் இற்கு குடிபெயர்ந்தவர்.

நிகொலஸ் சர்கோசி இம் மே மாத நடுப்பகுதியில் தற்போதைய அதிபரான 74 வயது ஜக் சிராக் (Jacques Chirac) இடம் இருந்து அதிபர் பதவியை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜக் சிராக் கடந்த 12 ஆண்டுகளாக பிரான்ஸ் அதிபராக பதவி வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டில் நிதி மந்திரியாக இருந்த நிகொலஸ் சர்கோசியின் பொருளாதார கொள்கை பலராலும் விரும்பப்பட்டது. பிரான்ஸ் நாட்டில் தற்போது நிலவும் அதிஉயர் வேலை இல்லாதிண்டாட்டம் வாழ்க்கை தராதரத்தின் வீழ்ச்சி போன்றவற்றில் இருந்து நிகொலஸ் நாட்டை மீட்பார் என மக்கள் நம்புகிறார்கள்.

பிரான்ஸ் நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இல்லாதவாறு 85 வீதத்திற்கு மேற்பட்ட வாக்களிக்க தகுதியுள்ள மக்கள் இத்தேர்தலில் வாக்களித்துள்ளார்கள்.

நிகொலஸ் சர்கோசியின் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமானவை சில -

- வேலையில்லாதவர் தொகையை 8.3% இல் இருந்து 5.0% இற்கு 2012 ஆண்டிற்குள் குறைப்பேன்.
- வரிச்சுமையை பதவியேற்று 100 நாட்களுக்குள் குறைப்பேன்.
- நாட்டை ஆட்டிப்படைக்கும் தொழிலாளர் யூனியன்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவேன்.
- குற்றம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனைகளை அமுல்படுத்துவேன்.
- சட்டவிரோதமாக குடியேறுபவர்களை தடுக்க சட்டமூலம் கொண்டுவருவேன்.
- நாட்டின் பொது சேவையின் தேவையற்ற செலவீனங்கள் மற்றும் தேவையற்ற ஊழியர்கள் போன்றவற்றை சீர்செய்வேன்.




- கிழமைக்கு 35 மணித்தியால வேலை என்பதனை மாற்றி பிரான்ஸ் மக்களை அதிகநேரம் வேலை செய்யத் தூண்டுவேன்.

நிகொலஸ் சர்கோசி அமெரிக்க ஆதரவு கொள்கையுடையவர் என்றாலும் ஈராக் விவகாரத்தில் அமெரிக்காவிற்கு எதிரான கொள்கையை உடையவர். அமெரிக்காவின் "உலக சூழல் வெப்பமடைதல்" தொடர்பான கொள்கையைச் சாடும் நிகொலஸ் சர்கோசி அமெரிக்கா இவ்விடயத்தில் எமது வருங்கால சந்ததியினரின் நன்மைக்காக முன்னோடியாக திகழவேண்டும் என்கிறார்.

நிகொலஸ் சர்கோசி குடிவரவாளர்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் எதிரானவர் என்ற கருத்து மக்களிடையே இருந்தாலும் சொகோலே ரோயலின் கொள்கைகளான சமூக உதவி பணம் வழங்குவதை நிரந்தரமாக்குதல், தொழிலாளரின் ஆகக்குறைந்த சம்பளத்தை உயர்த்துதல் மற்றும் பொதுச்சேவையில் இன்னும் ஐந்து இலட்சம் மக்களை சேர்க்கக் கூடிய திட்டங்களை வகுத்தல் போன்றவை நாட்டின் பொருளாதார நிலைமையையும் வேலையில்லாத் திண்டாட்டமும் இன்னும் மோசமடையும் என நினைத்த மக்கள் நிகொலஸ் சர்கோசியை தமது அதிபராக தேர்ந்து எடுத்தார்கள். நிகொலஸ் சர்கோசி தனது நெருங்கிய ஆலோசனையாளராக இருந்த சிசிலியா (Cecilia) யை திருமணம் செய்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளையர் ஆகியோர் பிரான்சின் புதிய அதிபராக தெரிவு செய்யப்பட்ட நிகொலஸ் சர்கோசிக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



**HOME INSPECTION**

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

***Expert Building Inspections LTD.***

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**

# விடுமுறையாகக் கொண்டாடும் விக்டோரியா தினம்

மே மாதம் 21 திகதி கனடா தேசம் விக்டோரியா மகாராணியின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறது. விக்டோரியா மகாராணியின் காலமே பிரித்தானியாவின் பொற்காலம் எனக் கூறப்படுகின்றது. இவரின் காலத்தில்தான் பிரித்தானியா வெகு உற்சாகத்தோடு புதியபுதிய நாடுகளைக் கண்டுபிடித்து தம் அரசின் கீழ் கொண்டு வந்தது. இராணியார் தமது பதினெட்டாவது வயதில் 1837ஆம் ஆண்டு பிரிட்டனின் மகாராணியாக முடிசூடியவர். குடிமக்கள் இல்லாத அல்லது குறைந்த நாடுகளில் தமது மக்களைக் குடியேற்றியும் மற்றைய நாடுகளில் தங்கள் கல்விமுறை, சட்டங்கள், மரபுகள் சம்பிரதாயங்கள் ஆங்கிலமொழி என்பவற்றைப் புகுத்தி நாகரிகம் அடையவும் செய்தவர். இவரது சாம்ராஜ்யத்தில் சூரியன் மறைவதில்லை என்றபடி உலகின் நாலிலொரு பிரதேசமும் மனித இனத்தின் நாலிலொரு பங்கினரும் அவர்களுக்கு சொந்தமாகின. அக்காலத்தில் கனடாவின் ஐம்பத்தைந்து இலட்சம் மக்களும் இதற்குள் அடங்குவர்.

உறுதியான போக்கும் விவேகமான சிந்தனையும் அவரது விரிவுக்கு உதவியாயிருந்தன. அவருடைய போக்கு, இதர அரச அலுவலர்களுக்கும் ஏற்றதாயிருந்தமையால் உற்சாகமான குடியேற்றமடைந்தது. இங்கிலாந்தின் மகாராணியாக இருந்தவர்களின் இந்தியாவுக்கு சக்கரவர்த்தினியாகவும் 63 ஆண்டுகள் கடமையாற்றியவர். அதற்கு 39 வருடங்களுக்கு முன்னரே கணவன் அல்பேட் இறந்தும் அவருடைய அறையை அவர் வசிப்பது போன்ற நிலையில் தான் வைத்திருந்தார். உடைகளை கூட அந்தந்த இடத்தில் எடுத்து வைக்கச் சொல்லியும் காலையில் அவர் சவரம் செய்வதற்காக சுடுநீர் வைக்கச் செய்தும் எப்படி உயிருடன் இருக்கும் போது நடைபெற்றதோ அப்படியே இறுதிவரை அவ்வறையை உயிரோட்டமாகவே வைத்திருந்தார்.

கனடாவும் பிரித்தானிய அரசாட்சியில் நீண்டகாலமாக இருந்தது. விக்டோரிய மகாராணி முடிசூட்டிய 50 ஆம் வருடப் பொன்விழாவையும் 60 வருட வைரவிழாவையும் விமரிசையாக கொண்டாடியது. மகாராணியும் கனடாவுக்கு வருகை தந்து கனேடியர்களைச் சிறப்பித்தார்.

வைரவிழாவுக்கு இங்கிலாந்து சென்ற கனடாப்பிரதமர் வில்பிறெட் லோறியரை நைற் (Knight)என்னும் பிரபுப்பட்டம் கொடுத்துக் கௌரவித்தார்.

கனடாவின் தலைநகரம் எங்கே அமையவேண்டும் எனும் சர்ச்சை எழுந்த போது (கியூபெக் அல்லது ஒட்டாவா) கனடா வரைபடத்தின் மேல் ஈட்டி எறிந்து அது எதில் விழுகிறதோ அதை தலைநகரமாக்க வேண்டும் எனக்கூறி எறிந்தார். அது ஒட்டாவாவில் குத்தியது. எனவே ஒட்டாவா தலைநகராயிற்று.

குடியேற்றநாடுகள் சுதந்திரம் பெறுங்காலத்தில் தம் விசுவாசத்தையும் தோழமையையும் காட்டுவதற்காக பொதுநலவாய நாடுகள் எனும் பெயரில் கூட்டுச் சேர்ந்தன. அந்தக் கூட்டிணைப்பு இன்றும் வருடாவருடம் கூடி ஆக்கபூர்வமான விடயங்களைச் செயற்படுத்திவருகின்றன. வளர்ந்த நாடுகள் வளர்முக நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் எனும் திட்டம் 1950 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற மகாநாட்டில் தீர்மானமாகி அதற்கு கொழும்புத் திட்டம் எனப்



பெயரிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் எம்மவர்க்கும் கல்வி நோக்கில் கனடாவரும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.
இன்றும் கனடா நமது தோழமையைக் காட்டும் பொருட்டு மகாராணியாரின் பிறந்த தினத்தை விடுமுறைநாளாகக் கோலாகலமாக கொண்டாடுகிறது.

### இலங்கையில் மகாராணியின் பொன்விழா

மகாராணியாரின் பொன்விழா இலங்கையிலும் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. அதிலும் யாழ்ப்பாணத்தின் கொண்டாட்டம் 'யாழ்ப்பாண வைபவங்க கௌமுதி'யில் இப்படிக் காணப்படுகிறது. இங்கே சிறிது எளிமைப்படுத்தப்பட்டு வருகிறது. "பிரித்தானிய சாம்ராச்சிய நீதிபதியும் இந்திய சக்கரவர்த்தினியுமாகிய ராணியாரின் ஐம்பதாம் வருட மகோற்சவ கொண்டாட்டம்" எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ளது.

1887 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28, 29 திகதிகளில் விமரிசையாக கொண்டாடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண அரச அதிபதி துவைனம் துரையின் ஏவுதலினால் யாழ்ப்பாணமும் விசேட பங்குபற்றியது. நகரம் முழுவதும் பலவர்ண கடதாசி மாலைகளால் சிங்காரமாக அலங்காரம் நடைபெற காலை 9 - 11 வரை இலண்டன் திருச்சபை தேவலாயத்தில் தேவ ஆராதனை இராணின் பெயரில் நடைபெற்றது. அவ்வண்ணமே மற்றைய ஆலயங்களிலும் ஆராதனைகள் நடைபெற்று முடிந்ததும் 11:00 மணியளவில் ஏற்கனவே ஆயத்தம் செய்து வைத்தபடி அந்தந்த மணியக்காரர் மக்களுக்கு ஏற்றதான அன்னதானமும் சமைத்த உணவு சாப்பிட மறுத்தோருக்கு அரிசி காய்கறியும் வழங்கினார்.

மாலை நாலுமணிக்கு கோட்டைக்கு அண்மையில் முனியப்ப கோவிலடியில் பாரிய அலங்காரப்பந்தலிலே பிரபுக்கள், துரைமார், குருமார் வரிசைக் கிரமப்படி அமர்ந்திருக்க மாகாண அதிபதி துவைனந்துரை ஐம்பது ஆண்டுகளையும் பத்துப்பத்தாக பிரித்து ஒவ்வொரு பத்திலும் மகாராணியாரால் செய்வித்து முடிக்கப்பட்ட செயல்களை வாசித்தார். ஏழரை மணியளவில் நடனம், சங்கீதம், வாத்தியம், நாடகங்கள் நடந்தன.

மறுநாளும் மணியகாரரின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிகளிலும் நடையாகவும் முற்ற வெளிக்குச் சென்று மக்கள் குழுவினர். அன்று துவைனைந்துரையே 'பிரசவப்பெண்களுக்கென விக்டோரியா மகாராணியின் பெயரால் ஒரு வைத்தியசாலைக்கு' அத்திவாரக்கல் நாட்டினார். மேளதாள சங்கீத பாண்ட் வாத்தியங்களுடன் வைபவம் நடந்திபின் நாட்டில் செய்ததும் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டதுமான வாணங்கள், வர்ணஜாலங்களுடன் வேடிக்கை காட்டின. முற்றவெளியெங்கும் எள்ளும் விழாத சனக்கூட்டம். மேற்கத்திய, நம்நாட்டு நடன நாடக நிகழ்ச்சிகள் நடைபெற இருந்தன.

ஏதோ ஒரு வாணம், சுடத்தெரியாது கையாளப்பட்டதால் பீரங்கிபோல் வெடித்து சிலரைப்பலி கொண்டது. 'கூழ்ப்பானைக்குள் சா' என்றாற் போல் ஒய்யாரக் களிப்புள் மரணம் புகுந்தது. அழுகையும் கூக்குரலும்; பொலிஸ் அதிபதி றட்துரையின் வலதுகையாக விளங்கும் சார்ஜன் சுப்பையா மகனும் வீழ்ந்தவருள் ஒருவராவார். துவைனந்துரை அந்த இடத்துக்கு ஓடிச் சென்று இறந்து போன மூவரையும் விட காயம்பட்டோரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

இது ஒரு மூலையில் நடைபெற்றதால் இதையறியாத கூட்டம் இருக்க மற்றையோர் கிலி கொண்டோட தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றன. "செத்தவன் வாயில் மண் இருந்தவன் வாயில் சோறு" என்பது போல விடியும் அளவும் இருந்து அரிச்சந்திர விலாசமும் பார்வையிடப்பட்டது.

தெல்லிப்பளை வித்தியாசாலை அதிபர் மெஸ்.சி.சி எரோமியாப் புலவர் மகோற்சவ வாழ்த்து எனும் பெயரில் மகாராணியின் அழகுசீர் சிறப்பு முதலியவற்றைப்பற்றி சில பாக்களை யாத்து அச்சடித்து விநியோகித்தார்.



- காங்கயி -


**SAFETY TRUCKS**

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

20 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

***905-793-9546 / 416-616-5979***

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# வாஸ்து



சத்குரு ஜக்கி வாசுதேவ்

நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருக்கும். தமிழ்நாட்டில் ஒருவிதமான வாஸ்து இருக்கிறது. கார்நாடகத்திற்குச் சென்றால் அங்கு வேறுவிதமான வாஸ்து வழக்கில் இருக்கிறது. கர்நாடகாவிலும் கூட மலைப்பகுதிகளில் இன்னொரு விதமான வாஸ்து பின்பற்றப்படுகிறது. மலைப்பகுதிகளில் வேறு விதமாகவும், சமப்பகுதிகளில் வேறுவிதமாகவும் வாஸ்து இருக்கிறது. வாஸ்து என்றால் என்ன, பழங்காலங்களில் கிராமங்களில் கட்டிடக்கலை நிபுணர்கள் யாரும் இல்லை. உதாரணத்திற்கு ஒரு மனிதர் தன் வீட்டைத் தானே கட்டிக் கொள்கிறார். அவர் 5 அடி உயரத்திலும், 5 அடி அகலத்திலும் தனக்கென்று ஒரு வீடு கட்டிக்கொள்கிறார். கதவு ஒரு மூலையில் இருக்கிறது. ஜன்னல் வைக்க மறந்துவிட்டார். இப்படிப்பட்ட ஒரு வீட்டில் இருந்தால் உங்கள் மனதிற்கும் உடலுக்கும் என்ன ஆகும்? சீரழிந்து போய்விடும் இல்லையா, இந்தக் கட்டுமான அமைப்பில் இந்த சுவர்களுக்கு இடையில் இருந்து கொண்டிருந்தால் நிச்சயமாக உடலும் மனமும் சீர்கெடும். எனவே அடிப்படை வழிகாட்டுதல்களுக்காக சாஸ்திரத்தை வடிவமைத்தார்கள்.

*ஈஷா யோக மையம் - வெள்ளியங்கிரி*
*மலைச்சாரல், கோயம்புத்தூர்*
*E-mail: yogacenter@ishafoundation.org*
*website: www.ishafoundation.org or www.ishayoga.org*

சத்குருவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியையால் எதிர்வரும் July 04, 07 தொடக்கம் July 10, 07 வரை யோகா வகுப்புக்கள் நடத்தப்படும்.
ரொறொன்ரோவில் தொடர்புகளுக்கு: 416.699.0951

சாஸ்திரம் என்ற சொல்லிற்கு 'வழிகாட்டுதல்' என்று பொருள். ஒரு வீடு கட்டுவதாக இருந்தால் அந்தப் பகுதியின் சீதோஷ்ணத்திற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட விதத்தில் கட்டிடம் அமைய வேண்டும். மேற்கில் மறைகிற சூரியக்கதிர்கள் அங்கே வலிமையாக விழுமேயானால் மேற்குப்பகுதியில் இருக்கிற சுவர் தடித்த சுவராக இருக்க வேண்டும். அதன் இன்னொரு பக்கம் கொஞ்சம் மெல்லிய சுவராகக் கூட இருக்கலாம். எனவே ஓர் அளவிற்கு மக்கள் பின்பற்றினார்கள். நல்ல பலன் கிடைத்தது. எனவே போதிய காற்றோட்டத்தோடு வீடுகட்டுவதற்கான கட்டிடக் கலை ஆலோசனைகள்தான் வாஸ்து என்பது. கிராமங்களில் கட்டிடக்கலை நிபுணர்கள் இல்லாததால் சில அடிப்படை விதிகள் வகுக்கப்பட்டன. அவற்றின்படி வீடுகள் கட்டினால் அங்கு வாழ்வதற்கு நன்றாக இருக்கும் என்பதற்காக.

இந்தியாவிலேயே அந்தந்தப் பகுதிகளுக்கேற்ப பலவிதமான வாஸ்துக்கள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாகத்தான் மக்கள் வாஸ்துமுறைகளுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினார்கள். கடந்த 8 - 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலை இல்லை. இப்போதுதான் அது ஒரு பெரிய வணிகம் ஆகிவிட்டது. வாஸ்து உங்களுடைய வாழ்க்கைக்குள் வருவதற்குக் காரணம் எப்போதுமே நீங்கள் அச்சத்தில் வாழ்வதுதான். ஒரு சமையல் அறை இருக்க வேண்டிய இடத்தில் கழிவறையும், கழிவறை இருக்க வேண்டிய இடத்தில் சமையல் அறையையும் கட்டியிருக்கிறீர்கள். அந்த அளவிற்கு இது போயிருக்கிறது. இப்போது என்ன கேள்விப்படுகிறேன் என்றால் நிறையபேர் அவர்களின் கழிவறைகளில் இருக்கிற தண்ணீர் தொட்டியின் திசையைக் கூட மாற்றி வைக்கிறார்கள். ஏனென்றால் வாஸ்து சொல்கிறது குறிப்பிட்ட திசையில் அமர்ந்து கொண்டு மலங்கழித்தால் நல்லது என்று. இதைவிடவும் கொடுமை இருக்க முடியுமா என்ன?

நான் முதன்முதலாகக் கோவைக்கு வந்தபோது, ஒரு வீட்டிற்கு என்னை சாப்பிடக் கூப்பிட்டிருந்தார்கள். அது ஒரு பெரிய வீடு. வீட்டிற்குள்ளேயே ஒரு சிறிய தோட்டம் இருந்தது. மிக அழகான வீடு. ஆனால் அந்தத் தோட்டத்தின் மையப்பகுதியில் ஒரு பெரிய கொடிக்கம்பம் இருந்தது. எந்த ஒரு காரணத்திற்காகவும் இல்லாமல் அது வெறுமனே அங்கு நின்று கொண்டிருந்தது. அங்கிருந்த பெண்மணியைப் பார்த்து, 'இந்தக் கொடிக்கம்பம் எதற்காக' என்று கேட்டேன். அவர் என்னிடம் சொல்லத் தயங்கினார். என்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன ஆகும் என்று அவருக்குத் தெரியும். எனவே 'நான் ஈஷா யோகா வகுப்பிற்கு முன்பே வந்திருந்தால் இதைச் செய்திருக்க மாட்டேன்' என்று சொன்னார். 'ஏன், என்னாயிற்று' என்று கேட்டேன். ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வீட்டைக் கட்டியதாகவும் அங்கு பல ஆண்டுகள் அவர்கள் நன்கு வாழ்ந்து வந்ததாகவும் சொன்னார். ஆனால் 6 மாதங்களுக்கு முன்பு அங்கு ஒரு வாஸ்து விஞ்ஞானி வந்தார். இயற்கையில் ஏற்கனவே இருப்பதைக் கண்டறிபவர்களை விட இல்லவேயில்லாத ஒரு விடயத்தைக் கண்டுபிடிப்பவர்கள்தான் பெரிய விஞ்ஞானிகள். இந்த வாஸ்து விஞ்ஞானி வந்து பார்த்துவிட்டு 'இந்த வீட்டில் எல்லாம் நன்றாக இருக்கிறது. ஆனால் இந்த வீட்டின் தென்மேற்கு மூலை அந்த வீட்டைவிடக் கொஞ்சம் உயரமாக இருக்க வேண்டும். ஆனால் உங்கள் வீட்டின் வடமேற்கு மூலை தான் கொஞ்சம் உயரமாக இருக்கிறது. இது இப்படியிருந்தால் உங்கள் மகன் இறந்துவிடுவான்' என்று சொல்லியிருக்கிறார். இந்தப் பெண்மணிக்கு 2 மகன்கள். இதை சொல்லிவிட்டு அந்த விஞ்ஞானி போய்விட்டார். இப்பொழுது இந்தப் பெண்மணி பதறிப் போய்விட்டார். அவரது கணவர் ஒரு மருத்துவர். அவர் இதை ஏற்கவில்லை. அவருக்கு வீட்டை இடித்துக் கட்டுவதில் விருப்பமில்லை. அ ந ் த விஞ்ஞானி இந்தக் குழப்பம் இந்த வீட்டில் ஒரு வாரம் நீடித்திருக்கும் வரை பொறுத்திருந்தார். இந்த வாரத்திற்குள் பல்வேறு உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட்டு ஏறக்குறைய பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு இந்தப் பெண்மணி போய்விட்டார். தன் மகன்கள் தெருவோரத் திருப்பங்களில் இறந்துவிடுவது போல் கனவு வரத்தொடங்கியது. அவர் மனதில் ஏகப்பட்ட கற்பனைகள் தொடங்கின. மிகவும் பயந்து போய்விட்டார். தன் மகன்கள் எப்போதும் இறக்க நேரிடும் என்ற அச்சம் நீடித்தது. எனவே ஒரு வாரத்திற்குப் பிறகு இந்த விஞ்ஞானியை மறுபடியும் அழைத்தார். அந்த வாஸ்து விஞ்ஞானிக்கும் இது தெரியும். அவர் சொல்லிவிட்டுப் போய் எத்தனை நாட்களுக்குள் இந்த எதிர்விளைவு ஏற்படும் என்று. ஒரு வாரத்திற்குள் அந்த வாஸ்து விஞ்ஞானியை தொலைபேசியில் அழைத்தார். அந்தத் தீமையை எதிர்கொள்வதற்கு ஏதாவது செய்யுமாறு அவர்களை இவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இந்த மனிதர் அதற்கு ஒரு பரிகாரம் இருக்கிறதென்று சொல்லி அதற்கு 20,000 ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு அவர்கள் மகன் சாகாமல் இருப்பதற்காக ஒரு 25 அடி உயர கொடிக்கம்பத்தை வீட்டிற்குக் கொண்டு வந்தார். அந்த வீட்டில் இருப்போர் உதவியோடு மிகவும் சிரமப்பட்டு அந்த கொடிக் கம்பம் வீட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இதற்காக மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டது போல நடித்தால்தானே இந்த நாடகம் உச்சகட்டத்தை அடையும். அந்தக் கொடிக்கம்பத்தைக் கொண்டு வந்து வைத்துவிட்டார்கள். இப்போது இந்தக் கொடிக்கம்பம் வந்ததால் அதன் மேற்கு மூலை உயரமாகி அவர்கள் மகனின் உயிரை இவர் காப்பாற்றிவிட்டார்.

நிச்சயமாக ஒரு வீடு கட்டுவதற்கு என்று ஒரு விஞ்ஞானம் இருக்கிறது. அதில் உடல்நலம், உள்ளநலம் என்று நல்வாழ்க்கைக்கு உதவி செய்வதற்கென்று அம்சங்கள் உள்ளன. இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அச்சத்தின் காரணமாக அதற்கு அளவு கடந்த முக்கியத்துவத்தைக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். வாஸ்து ஒரு விஞ்ஞானம்தான். நான் மறுக்கவில்லை. இப்பொழுது அது முழுமையாகக் கைவிடப்படடிருக்கிறது. அதற்கு மாற்றாக சீனாவில் இன்னொன்று வந்திருக்கின்றது. இனி உங்கள் கழிப்பறையை நீங்கள் சமையலறையாக மாற்ற வேண்டிய அவசியமில்லை. கழிப்பறையின் முன்னால் ஒரு கண்ணாடி வைத்து விட்டாலே போதும். கழிப்பறையிலேயே உங்கள் சமையலறை தெரியும். இதைச் செய்தால் எல்லாம் சரியாகிவிடும். இவர்கள் இன்னும் அறிவாளிகளாக இருக்கிறார்கள். வெறும் கற்களும் கண்ணாடிகளுமே எல்லாவற்றையும் சரி செய்து தருகிறது. எது செய்ய வேண்டுமோ அதை நீங்கள் செய்வதில்லை. தேவை இல்லாத விடயங்கள் பலவற்றைச் செய்கிறீர்கள். உங்கள் எல்லா சக்தியையும் இது போன்ற செயல்களில் நீங்கள் வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.




KV TRUCK DRIVING CENTER

6 கிழமைகளில் நீங்களும் கனரக வாகன சாரதி ஆகலாம்

A C D Z வாகன சாரதி அனுமதி பத்திரங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.
ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பயிற்சிகள் வழங்கப்படும்.
உங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.
பயிற்சியின் முடிவில் உடனடி வேலைவாய்ப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

பயிற்சி முழுவதற்குமான கட்டணம் $1699.00 மட்டுமே

CANADA & USA
பெருந்தெருக்களில் பயிற்சி வழங்கப்படும்

* 365 LEARNING PERMIT, * LOG BOOKS,
* AIR BREAK (Z) * DANGEROUS GOODS,
* BORDER CROSSING

WELFARE & UNEMPLOYMENT
இல் இருப்பவர்களுக்கு இலவச பயிற்சி வழங்கப்படும்.

உங்கள் வசதிக்கேற்ப வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சி வழங்கப்படும்.

அழையுங்கள்: கிருபா
647-274-0300 / 647-428-6988
Fax: 647-428-6989
visit: www.kvtrucking.com
805 MIDDLEFIELD ROAD, UNIT - 202, SCARBOROUGH, ONTARIO.
(Middlefield & McNicoll)



வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
HOMELIFE HIGHER STANDARDS
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

CLARICA

## நீங்கள் காலப் போக்கில் கிளாரிகாவை, நம்பத் துவங்கியுள்ளீர்கள். ஒரு பெரிய முத்திரை மற்றும் உறவை ஏற்படுத்திய முறையில், இதோ உங்களுக்காக சில நற்ச்செய்திகள்:

# Clarica, Sun ஆயுள் நிதியாகிறது.




எப்போதும் நமக்கு கிளாரிகா என்ற பெயரில் அபிமானமிருக்கும். ஆனால் வெளிப்படையாக பார்த்தோம் என்றால், வியாபார நடைமுறையில் நீங்கள் பெறும் பயன்கள், இந்த முடிவினை எடுப்பதற்கு எளிதாக்கியிருக்கும் என்பதே உண்மை.

சன் ஆயுள் நிதியாளராக, நாங்கள் உலகின் நிதி சேவை நிறுவனங்களில் ஒன்றாகவும் மற்றும் கனடாவின் மிகப் பெரும் வெற்றியாளராகவும் உள்ளோம். இது தொடர்பான எங்களின் நிதி வளங்கள் மற்றும் உலகளாவிய நீட்சி, உங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் வகையில் மேன்மேலும் சேவைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க உறுதுணையாக இருக்கும். உங்கள் கனவுகள்.

ஆம், எங்கள் பெயர் மாற்றத்திற்குப் பிறகு நீங்கள் அறிந்த மற்றும் உங்கள் நம்பிக்கைக்குரிய கிளாரிகாவின் ஆலோசகர்களான பிராங்க், கேரோல், மற்றும் சஞ்சை, ஸ்டீவ், மற்றும் கேத்தி, இப்பொழுதும் அதே விதத்தில் பிராங்க், கேரோல்ஸ், மற்றும் சஞ்சை, ஸ்டீவ், மற்றும் கேத்தி, ஆகியோர்களே, சன் ஆயுள் நிதியகத்தில் மட்டும் ஆலோசகர்களாக உள்ளனர்.

நாங்கள், உங்களுடைய நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை எப்போதும் போல தொடர்ந்து மதிப்போம்.

பெயர் மாற்றங்கள் குழப்பமாகிவிட வாய்ப்புள்ளது. அதனால்தான் எங்களைப்பற்றி பிராங்க் என்னும் இளைஞரிமிருந்து கேட்பதற்கு நீங்கள் ஆவலாக இருப்பீர்களென்று எண்ணினோம். ஏனென்றால் நாங்கள் எப்போதுமே அவ்வாறு நம்புகிறோம்:

தெளிவு செய்வதற்காக நிறைய சொல்ல வேண்டியுள்ளது.



ஹலோ, நான் **Ajith Sabaratnam**

நான் உங்கள் நம்பிக்கைக்குரிய கிளாரிகா ஆலோசகர் மற்றும் இப்போது உங்கள் சன் ஆயுள் நிதி ஆலோசகராக ஆகப்போகிறேன். நான் இதிலுள்ள பயன்களைப்பற்றி உங்களிடம் பேச தயவு செய்து 416-439-2800 இல் அழைக்கவும்.

Sun Life Financial

Associated with Clarica Financial Services Inc. and Clarica Investco Inc., a Mutual Fund Dealer.

These companies intend to change their names to reflect the Sun Life Financial brand. Both companies are wholly owned subsidiaries of Sun Life Assurance Company of Canada, one of the Sun Life Financial group of companies.

# மழை ஓய்ந்த பின் விழும் மழைத்துளிகள்!

கடந்த ஒன்றரை மாதமாக கொட்டிய உலககிண்ண கிரிக்கெட் மழையில் நனைந்த கிரிகெட் ரசிகர்களுக்கு இன்னும் ஈரம் விட்டபாடில்லை. சென்ற இதழில் ஒன்பதாவது உலக கிண்ண போட்டிகளில் நடைபெற்றது முடிந்த சாதனைகளையும் வேதனைகளையும் எழுதியிருந்தேன். இம்முறை இறுதியாட்டத்தில் நடைபெற்ற சாதனை துளிகளை இங்கு பார்ப்போம்.

## இறுதியாட்டம்

### 1. சாதனைதுளிகள்....வெற்றி வித்தியாசம்

ஜெயசூர்யா '12,000' அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதி போட்டியில் 58 ஓட்டங்கள் எடுத்த போது இலங்கையின் ஜெயசூரியா ஒரு நாள் போட்டிகளில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை படைத்தார். இதுவரை 290 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 25 சதம், 64 அரைசதத்துடன் 12,005 ஓட்டங்கள் குவித்துள்ளார். முதலிடத்தில் சச்சின் (14,847) இருக்கிறார்.

• உலக கோப்பையில் அதிக ஓட்டம் குவித்த அணித்தலைவர் என்ற சாதனையை இலங்கையின் ஜெயவர்த்தனா தன்வசப்படுத்தியுள்ளார். இவர் 11 போட்டிகளில் 548 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இரண்டாவது இடத்தில் பாண்டிங் (539) இருக்கிறார்.

## எஸ். கணேஷ்

### 'முதல் 10 துடுப்பாட்டவீரர்'

அதிக ஓட்டங்கள் குவித்த முதல்நிலை 10 வீரர்கள்

| வீரர் | போட்டி | விக்கெட் |
|---|---|---|
| மெக்ராத் (அவுஸ்.) | 11 | 26 |
| முரளிதரன் (இலங்கை) | 10 | 23 |
| டெய்ட் (அவுஸ்.) | 11 | 23 |
| ஹாக் (அவுஸ்.) | 11 | 21 |
| மலிங்கா (இலங்கை) | 8 | 18 |
| பிராக்கன் (அவுஸ்.) | 10 | 16 |
| வெட்டோரி (நியூசி.) | 10 | 16 |
| பிளின்டாப் (நியூசி.) | 10 | 16 |
| லாங்கிவெல்டு (தென்.ஆ.) | 8 | 14 |
| ஹால் (தெ.ஆ.) | 9 | 14 |

• உலக கோப்பை தொடரில் தோல்வியே அறியாத வெற்றி அணித்தலைவர் என்ற பெருமையை அவுஸ்திரேலியாவின் பாண்டிங் பெறுகிறார். இதுவரை 22 உலக கோப்பை போட்டிகளில் அணித்தலைவராக பங்கேற்ற இவர் அணிக்கு அனைத்திலும் வெற்றி தேடி தந்துள்ளார்.

• நான்கு உலக கோப்பை (1996, 99, 2003, 07) இறுதி போட்டியில் விளையாடியவர்கள் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் மெக்ராத் மற்றும் பாண்டிங் படைத்துள்ளனர்.

### முதல் 10 பந்துவீச்சாளர்கள்

அதிகவிக்கெட் வீழ்த்திய முதல்நிலை 10 வீரர்கள்

| வீரர் | போட்டி | ஓட்டம் | சதம் |
|---|---|---|---|
| ஹைடன் (அவுஸ்.) | 11 | 659 | 3 |
| ஜெயவர்த்தனா (இலங்கை) | 11 | 548 | 1 |
| பாண்டிங் (அவுஸ்) | 11 | 539 | 1 |
| ஸ்டைரிஸ் (நியூ) | 10 | 499 | 1 |
| காலிஸ் (தெ.ஆ) | 10 | 485 | 1 |
| ஜெயசூர்யா (இலங்கை) | 11 | 467 | 2 |
| கில்கிறிஸ்ட் (அவுஸ்) | 11 | 453 | 1 |
| பீட்டர்சன் (இங்கி.) | 9 | 444 | 2 |
| ஸ்மித் (தெ.ஆ.) | 10 | 443 | - |
| எம்.கிளார் (அவுஸ்.) | 11 | 436 | - |

• ஒரே உலக கோப்பை தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் மெக்ராத் படைத்துள்ளார். இவர் 11 போட்டிகளில் 26 விக்கெட்டை கைப்பற்றியிள்ளார்.

• உலககோப்பை 2007 இல் 18 சிக்சர் அடித்த அவுஸ்திரேலியாவின் ஹைடன் ஒரே தொடரில் அதிக சிக்சர் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

• இத்தொடரில் அதிக ஓட்டம் குவித்த வீரர் என்ற சாதனைக்கும் அவுஸ்திரேலியாவின் ஹைடன் சொந்தக்காரர். இவர் 11 போட்டிகளில் விளையாடி 659 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஒரே உலக கோப்பை தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் வரிசையில் இவர் இந்தியாவின் சச்சினுக்கு (673) அடுத்தபடியாக இரண்டாவது இடம்பிடித்துள்ளார். இப்போட்டியில் ஹைடன் கூடுதலாக 15 ஓட்டங்கள் எடுத்திருந்தால் சச்சின் சாதனையை முறியடித்திருக்கலாம்.

சூப்பர் பேட்டிங்கை வெளிப்படுத்திய கில்கிறிஸ்ட் நிறைய சாதனைகளை படைத்தார். உலக கோப்பை இறுதியாட்டத்தில் அதிக ஓட்டம் (149) எடுத்த வீரரானார். அணித்தலைவர் பாண்டிங்கின் (140), எதிர் இந்தியா, 2003) சாதனையை தகர்த்தார். தவிர விக்கெட்கீப்பர் பேட்ஸ்மேனாக உலக கோப்பையில் அதிக ஓட்டம் எடுத்த இந்தியாவின் டிராவிட் சாதனையையும் (145 ஓட்டம், எதிர் இலங்கை, 1999) தகர்த்தார்.

• மொத்தம் எட்டு சிக்ஸ் அடித்த இவர், உலக கோப்பை பைனலில் அதிக சிக்ஸ் (8) அடித்த பாண்டிங் சாதனையை (எதிர் இந்தியா, 2003) சமன் செய்தார்.

• உலக கோப்பை பைனலில் அதிவேக சதம் (72 பந்துகள்) அடித்தவர் என்ற சாதனை படைத்தார். முன்னதாக 1975 இல் நடந்த பைனலில் வெஸ்ட் இண்டீஸ் ஜாம்பவான் கிளைவ் லாய்ட் 82 பந்துகளில் சதம் (எதிர் அவு) அடித்த இருந்தார்.

• உலக கோப்பையில் முதல் சதம் அடித்த இவர், ஒருநாள் கிரிக்கெட்டில் 15வது சதம் எட்டினார்.

• இப்போட்டியில் 111வது ஓட்டங்களை எடுத்த போது ஒருநாள் கிரிக்கெட்டில் 9,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார்.

• உலக கோப்பையில் 50 விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமாக முதல் விக்கெட் கீப்பர் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் செய்துள்ளார். இவர் இதுவரை 31 உலக கோப்பை போட்டிகளில் பங்கேற்று 45 'கேட்ச்' மற்றும் எழு 'ஸ்டெம்பிங்' செய்துள்ளார்.

கிரிக்கெட்டில் கேட்ச் நழுவினால் வெற்றி பறிபோகும். கில்கிறிஸ்ட் வெறும் 31 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், கொடுத்த கேட்ச் வாய்ப்பை பெர்ணாண்டோ வீணாக்கினார்.

அவரது பந்திலேயே வாய்ப்பை நழுவவிட மனதளவில் தளர்ந்து போனார். விளைவு....? எட்டு ஓவரில் 74 ஓட்டங்களை அள்ளிக்கொடுத்தார். இவருக்கு பதிலாக ஆல் ரவுண்டர் மகரூப்புக்கு வாய்ப்பு அளித்திருக்கலாம்.

#### உலக கோப்பையில் ஹைடன் அதிக ஓட்டம்

பார்படாஸ் - அவுஸ்திரேலியாவின் அதிரடி துவக்க வீரர் ஹைடன் உலக கோப்பையில் 659 ஓட்டங்கள் குவித்து, அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்துள்ளார். துல்லியத்துக்கு பெயர் பெற்ற மெக்ராத் 26 விக்கெட் வீழ்த்தி பவுலர்கள் வரிசையில் முதலிடத்தை கைப்பற்றியுள்ளார். இவர்களின் சிறப்பான செயல்பாடுகள் தான் அவுஸ்திரேலியாவுக்கு நான்காவது உலக கோப்பை பெற்று தந்தது என்பதை மறுக்க முடியாது.

ஒன்பதாவது உலக கோப்பை தொடர் வெஸ்ட் இண்டீசில் நடந்தது. லீக் சுற்றில் தென்ஆபிரிக்க பந்துவீச்சை வெளுத்து வாங்கிய ஹைடன் 66 பந்துகளில் சதம் கடந்தார். உலக கோப்பை 2007 இல் அதிக ஓட்டம் குவித்த வீரர் என்ற பெருமையையும் தட்டி சென்றார். இவர் 11 போட்டிகளில் விளையாடி 659 ஓட்டங்கள் எடுத்தார். அபாரமாக பந்துவீசிய மெக்ராத், வங்கதேசத்துக்கு எதிரான போட்டியில் உலக கோப்பையில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் என்ற பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் (55) சாதனையை முறியடித்தார். இதேபோல் ஒரே உலக கோப்பை தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் என்ற இலங்கையின் வாஸ் (23விக், 2003ஆம் ஆண்டு) சாதனையை முறியடித்தார். இத்தொடரில் 26 விக்கெட் வீழ்த்தி தொடர் நாயகன் விருதையும் கைப்பற்றி, சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றார். இம்முறை உலக கோப்பை தொடரின் சிறந்த பீல்டராக இங்கிலாந்தின் பீட்டர்சன் திகழ்கிறார். இவர் ஒன்பது போட்டிகளில் எட்டு 'கேட்ச்' பிடித்துள்ளார். அதிக விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமாக கீப்பர் என்ற பெருமையை அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் பெறுகிறார். இவர் 11 போட்டிகளில் 17 விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமாக திகழ்ந்துள்ளார்.

### சாம்பியன்ஸ் லீக் - இறுதிச் சுற்றில் ஏ.சி.மிலான் - உதைபந்தாட்டம்

உலகில் நடைபெறும் முக்கிய கால்பந்து லீக் போட்டிகளில் சாம்பியன்ஸ் லீகும் ஒன்று. அப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு புகழ்பெற்ற ஏ.சி. மிலானும், லிவர்பூல் அணியும் தகுதி பெற்றுள்ளன.

**213**

வடக்கு இத்தாலியில் உள்ள சேன் சிரோவில் புதன்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஏ.சி. மிலான் அணி 3 - 0 என்ற கோல் கணக்கில் வலுவான் மான்செஸ்டர் யுனைடெட் அணியின் இறுதிச் சுற்றுக் கனவைத் தகர்த்தது.

ஏ.சி மிலானுக்காக விளையாடும் பிரேசில் வீரர் ககா, ஆட்டத்தின் 11வது நிமிடத்தில் அடித்த கோல் ஜெட் வேகத்தில் கோல் கம்பத்துக்குள் இறங்கியது. அதுவே அணியின் வெற்றிக்கு அடித்தளமிட்டது. சிடார்ஃப், அல்பர்டோ கிளார்டினோ ஆகியோர் மற்றைய இரண்டு கோல்களையும், தலா ஒன்றாக அடித்தனர்.

இவ்வெற்றியையடுத்து வரும் 23ஆம் திகதி ஏதென்ஸில் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் லிவர்பூல் அணியுடன் கோப்பைக்காக பலப்பரீட்சை நடத்த உள்ளது ஏ.சி.மிலான்.

2005 ஆம் ஆண்டு இவ்விரு அணிகளும் மோதிய இறுதி ஆட்டத்தில் லிவர்பூல் அணி 3 - 2 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலானுக்கு 'உதை' கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

**லிவர்பூல் வெற்றி** - அன்ஃபீல்டில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் லிவர்பூல் அணி 4 - 1 என்ற கோல் கணக்கில் செல்சியா அணியை பெனால்டி சூட் அவுட்டில் தோற்கடித்தது.

### நான் பாதி...நீ பாதி...ரெனிஸ்

அறிவியல் வளர்ச்சிக்கு விதிவிலக்கு கிடையாது. அதுபோல விளையாட்டையும் வித்தியாசமாகப் பார்க்கும் காலம் வந்துவிட்டது. அதன் தாக்கம் தான் இந்த ரெனிஸ் ஆட்டம். என்ன வித்தியாசம்? பாதி களிமண் தரை, (ஸ்பெயின் வீரர் ரஃபேல் நடாலுக்கு பரிச்சயமானது) பாதி புல்தரை (சுவிற்சலாந்து வீரர் ரோஜர் ஃபெடரருக்கு பரிச்சயமானது) நடாலும், ஃபெடரரும் ரெனிஸ் உலகில் ஜாம்பவான்களாக வலம் வந்தாலும், அவரவர்க்கு சாதகமான மைதானங்களை (கிளை, கிராஸ்) ஒருசேர வடிவமைத்து போட்டியை நடத்திப் பார்ப்போம் எனும் வித்தியாசமான சிந்தனை மலார்கா ரெனிஸ் ஆர்வலர்களுக்கு வந்தது. அந்த காட்சி ஆட்டத்துக்கு வீரர்கள் இருவரும் ஒப்புக்கொண்டது கூடுதல் சுவாரஸ்யம். அரங்கில் இருந்த ஏழு ஆயிரம் சீட்டுகளுக்கான ரிக்கெட்டுகளும் கண நேரத்தில் விற்றுத் தீர்ந்தன. களிமண் தரையில் தொடர்ச்சியாக 72 வெற்றிகளுடன் நடாலும், புல்தரையில் தொடர்ச்சியாக 48 வெற்றிகளுடன் ஃபெடரரும் மோதலுக்குத் தயாரானார்கள். வென்றது களிமண்ணா, புல்லா? இரண்டரை மணி நேரம் ரசிகர்களுக்கு விருந்தளிக்க ஆட்டத்தில் 7 - 5, 4 - 6, 7 - 6 (10) என்ற செட்கணக்கில் நடாலுக்கு சாதகமானது முடிவு. அது சரி. இந்த மைதானத்தை தயாரிக்க செலவு எவ்வளவு தெரியுமா? சுமார் எட்டு கோடி ரூபாய். தேவைப்பட்ட நாள்கள் 19.



இதே மைதானத்தில் அடுத்த ஆண்டும் விளையாட இருவரும் ஆசை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




**Raphael Maharaja**

Barrister, Solicitor & Notary Public

*Tel: 416-847-7077* *Fax: 416-847-7088*

211 – 2425 Eglinton Avenue East, Scarborough, ON M1K 5G8

**கனேடிய தமிழ் வழக்கறிஞர்**



# வீடு வாங்குபர்களுக்கு மேலதிக வரி

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

## தொடர் - 251



கடந்த பத்து வருடங்களாக நிலையான சொத்தின் (Real Estate) விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதை நுகர்வோர்கள் அவதானிக்க கூடியதாக உள்ளது.

வீட்டின் விலை அதிகரிக்கின்றபோதும், வாங்குபவர்களை ஊக்குவிப்பதற்காக, ஒன்ராரியோ அரசு, அடமானக் காப்புறுதி நிறுவனங்கள், நிதிநிறுவனங்கள்..... போன்றவை புதிய புதிய உத்திகளை, திட்டங்களைப் பாவித்து, சொத்துக்களை வாங்குபவர்களை அதிகரிக்கச் செய்வதுடன் மட்டுமன்றி வீட்டின் விலையை அதிகரிக்கச் செய்து வருகின்றது.

இப்பொழுது நிலையான சொத்துக்கள் வாங்குபவர்களை ஊக்குவிப்பதற்காக பலவிதமான ஊக்குவிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக

1. அடமானத்திற்கு பெற்ற பணத்திற்குரிய வட்டி மட்டும் மாதாமாதம் செலுத்துதல். (Interest only mortgage), 2. நீண்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கும் கடன் உதவி (Longer Amortization upto 40 years).
3. முதலீடு இல்லாமல் வீடு வாங்குதல் (Zero Down payment)
4. 20% முதலீட்டுடன் காப்புறுதியற்ற அடமானக்கடன் (அதாவது Conventional Mortgage with 20% Down Payment) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு பக்கத்தில் வீடு விற்றல் வாங்கலை ஊக்குவிப்பதற்கு பல திட்டங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில், சொத்து வாங்குபவர்கள் மீது மேலதிகவரியை, ரொறொன்ரோ மாநகர முதல்வர் டேவிட் மில்லர் கொண்டுவர எத்தனிக்கின்றார். இவ்விதமான முடிவு வீட்டு வியாபாரத்தில் மந்தத்தை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கலாம். அதாவது ரொறொன்ரோ மாநகரம் நிலமாற்று வரியை அதிகரிக்க சிந்திப்பது தெரியவந்துள்ளது.

ரொறொன்ரோ மாநகரம் வீட்டின் விலையானது ஒரு குறிப்பிட்ட விலைக்கு அதிகமாக இருந்தால், ஏற்கனவே செலுத்தப்படும் மாற்றுவரியுடன், மேலதிகமாகவும் ஒரு வரியைக் கொண்டு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறாக மேலதிக வரியை ரொறொன்ரோ நகரம் கொண்டுவருமாயின் ரொறொன்ரோ பகுதியில் வீட்டின் விலையிலும், விற்று வாங்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையிலும் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தலாம் என பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறான மேலதிகவரி, ரொறொன்ரோவில் பாதிப்பை ஏற்படுத்தி, ரொறொன்ரோவை சுற்றியுள்ள நகரங்களிற்கு நன்மையை ஏற்படுத்தலாம்.

இந்தவரி இதுவரை கொண்டுவரப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று கூறமுடியாது. இந்த வரியை நடைமுறைப்படுத்துவதற்கு ரொறொன்ரோ மாநகர முதல்வரும் அவருடைய சகாக்களும் தீவிரமாக சிந்தித்து வருகின்றார்கள்.

### நிலையான சொத்தின் வியாபாரத்தில் சாதனை

அமெரிக்காவில் வீட்டின் விலையிலும், விற்று வாங்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையிலும் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்ற இந்தக் காலகட்டத்தில் ரொறொன்ரோ பெரும்பாகத்தின் வியாபாரத்தில் பலசாதனைகள் நடைபெற்று வருகின்றது. அதாவது 2007 ஆம் ஆண்டு ஏப்பரல் மாத விலையிலும், வியாபாரத்திலும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஏப்பரல் 2007 மாதத்தில் மட்டும் 9452 வீடுகள் கைமாறியுள்ளன. ஏப்ரல் மாதங்களில் மட்டுமல்லாமல், இதுவரையில் ஏப்ரல் 2007, ஒரு சாதனை மாதமாக கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் சாரசரி வீட்டுவிலைகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் 2007, வீட்டின் சராசரிவிலை $379,025 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாறு வீட்டின் விலையின் தொடர்ச்சியான அதிகரிப்பு, முதல்தர வீடு வாங்குபவர்களை, வீட்டுச்சந்தையிலிருந்து முற்றாக அகற்றி விடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம், என பொருளாதார வல்லுனர்கள் கூறி கவலை தெரிவித்துள்ளார்கள். குறைந்த வட்டிவீதம் ஒரு வகையான நல்ல சூழ்நிலையை வீட்டு வியாபாரத்திற்கு ஏற்படுத்தியுள்ளதையும் குறிப்பிட மறக்கவில்லை. இந்நிலைமை எவ்வளவு காலம் தொடரமுடியும்?

வட்டி வீதத்தில் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கினால் முதல் தடவை வீடு வாங்குபவர்களின் நிலைமை மாறலாம் எனத்தோன்றுகின்றது.




புதிய, அனுபவமிக்க வீட்டுப்பிரதிநிதிகள் எமது நிறுவனத்தில் சேர்ந்து கொள்ள அழையுங்கள்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

**House for sale**

- Neilson & Sheppard, 3 bedroom detached house with finished basement . Asking price $243,800
- Morningside & Old Finch, 3 bedroom detached house with finished basement. 3 washroom, Asking Only $249, 900

**Condo for sale** • Markham & Eglinton, 2 bedroom condo. Asking Only $127,000.

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# ஆலடி

வல்வெட்டித்துறையின் ஆலடி முச்சந்திக்கு
வன்மையான வரலாறு, அழிவுபடாமல்
அன்றும் இன்றும் என்றுமுண்டு.
ஆலடியைக் குறிசுட்டும்
வாடிஒழுங்கையில்தான் வணிகக் கட்டுமரத்தில்
'அம்மன்' தென்னிந்தியாவிலிருந்து
வந்து இறங்கியது. ஆலடி என்பது
முக்கியமான பஸ் தரிப்பு நிலையம்.
அங்கே, பின்னேரங்களில் துடிதுடிக்கும்
தூண்டில்மீன் சந்தை உண்டு.
வல்வெட்டித்துறை வரலாற்றில்
முதன்முதல் புதிய லொறியைக்
கொள்வனவுசெய்து ஆலடிக்குள்ளும்
சந்தி அரசுக்குள்ளும் நிறுத்தியவர்,
இந்த ஆலடி ரவியின் மாமன்
ஆலடிக்குட்டியாவர். கொத்துரொட்டிக்கடை
லோன்றி சலூன் 'வீடியோரவியின்' கடை
ஆலடிப்பவளத்தின் தட்டிக்கடை
தணிகாசலம் ஸ்ரோர்ஸ்
ஆலடிக்குட்டி மருமகனின் ஆலடிஸ்ரோர்ஸ்
அதற்குமுன்னால் சிங்கம்போல் நின்று
'சிகரட்' ஊதுவானே என் தம்பி.
அவன் உலகத்தைப் பல தடவை சுற்றிய
SEAMAN. கப்பலில் அவன் தொழில்
FOREMAN. அவன் ஆலடி நிழலில் வளர்ந்த
அசையாத நேர்மையாளன். பழகுவதற்குச்
சிறந்த அன்பன். கப்பல் தலைவன்
தேவசிகாமணியின் மூத்த புதல்வன்.
ஆமிச்சுப்பிரமணியத்தின் அருமை மருமகன்.
ஐம்பத்திநான்கு வயதில் இன்று
எங்களைவிட்டுப் போய்விட்டான்,

என்தம்பி
என்தம்பி
..?



முத்துராஜா

# திருச்சிதம்பரேச்சரம்

பண்: காந்தாரம்

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
நாதன்நாமம் தன்னைச்சொல்ல நாவிலமுதம் ஊறிடும்
நாதன்நாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
வாதபித்த வெப்பநோய்கள் மாறிவலிமை கூடுமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
ஆதிநாமம் அறிந்துசொல்ல அமுதம்வாயில் திரண்டெழும்
ஆதிநாமம் நமச்சிவாய நமச்சிவாய வாமெனின்
போதும்போதும் என்னச்செல்வம் யாவும்வந்து பொலியுமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
சோதிநாமம் தொழுதுசொல்ல நெஞ்சில்சோதி துலங்கிடும்.
சோதிநாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
கோதிலாத குணங்கள்யாவும் கூடிக்கொலுக்கொண் டாளுமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
வேதன்நாமம் விரும்பிச்சொல்ல மேனிதூய்மை யாகிடும்
வேதன்நாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
வேதமேனைக் கல்விஞானம் மேலெழுந்து விளங்குமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
போதிநாதர் நாமம்சொல்லப் புலன்கள்தூய்மை தோய்ந்தெழும்
போதநாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
சோதிஞானம் தோன்றிப்போதி நாதர்பாதம் காட்டுமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
கோதில்நாமம் உணர்ந்துசொல்ல உள்ளம்கோயி லாகிடும்
கோதில்நாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
தீதலாது நெஞ்சம்நாளும் செம்மைநெறியில் நிற்குமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
நீதிநாமம் நினைந்துசொல்ல நெஞ்சம்உறுதி பெற்றிடும்
நீதிநாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
நீதிநியாயம் அறியும்ஆற்றல் தோன்றியூன்றி நிற்குமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
தாதைநாமம் தன்னைச்சொல்ல தன்னையறிதல் தான்வரும்
தாதைநாமம் நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்ஆளும்
பாதைநான்கும் தேவையற்ற பான்மைஞானம் துலங்குமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
ஏதிலாரின் நாமம்சொல்ல என்றுமில்லைத் துன்பமே
ஏதிலாரை நமச்சிவாய நமச்சிவாய என்றிடின்
சாதிபேத மற்றவாழ்வு வேதமாகித் தாங்குமே.

காதலோடு நமச்சிவாய என்றுகொல்லங் கலட்டியின்
நாதன்நாமம் சொல்லத்தமிழர் நாடும்தோன்றிப் பொலியுமே
நாதன்நாமம் நமச்சிவாய என்று நாளும் ஓதினால்
ஆதரித்துக் கோளும் நாளும் ஆயநன்மை செய்யுமே.

இத்தலம் யாழ்ப்பாண மாநகருக்கு 10 மைல் வடபால் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கொல்லங்கலட்டி என்னும் பதியில் அமைந்துள்ளது. 1873ஆம் ஆண்டு கட்டப்பெற்றது.
இறைவர்: சிதம்பரேசுவரர்.
இறைவி: சிவகாமசுந்தரி.



கவிஞர் வி. கந்தவனம்

# பணத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்

**கந்தையா சண்முகம்**
**இளைப்பாறிய அதிபர்**

எவனுடைய மனதில் அதிகார பலத்தின் மமதை குடிகொள்ளாமல் இருக்கிறதோ, எவனுடைய உள்ளத்தில் ஆசை, பயம் போன்றவைகள் உணர்ச்சிகளின் கொந்தளிப்பை ஏற்படுத்தாமல் இருக்கிறதோ அப்படிப்பட்டவர்களிடம் இருந்து நல்ல செய்கைகள் மலர்ந்த வண்ணம் இருக்கும். பேராசையில் இருந்து முற்றிலும் விடுபட்ட மனதை ஒருவன் வளர்த்துக் கொள்ள வேண்டும். சுயநலம் நிறைந்த விருப்பத்தை ஒருவன் தன்மனதில் நுழைய இடம் கொடுக்ககூடாது. தன்சொந்த வெற்றி ஒன்றைப் பற்றியே ஒருவன் நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது.

நான், என்னுடையது என்பவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போதுதான் மன அமைதி அழிகிறது. தாங்கமுடியாத வலியையும் வேதனையையும் அது உண்டாக்குகிறது. சண்டையையும், சச்சரவையும் உருவாக்கக் காரணமாய் அமைகிறது. பெரும்பாலான மக்களிடையே பற்று, அன்பு, பாசம் போன்றவைகள் சிறிது கூட இல்லை. அனைவரும் தான் கண்ட வெற்றிகளைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தான் சாதித்தவைகளைப் பற்றிதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் என்ற அகந்தை கொண்டவனுக்கு கட்டாயம் மனஅமைதி இருக்காது. வெளிப்பார்வைக்கு அவர்கள் தைரியசாலிகளாகத் தென்பட்டாலும் அவர்களுடைய மனங்களிலே கலவரம் பயம் சந்தேகம் போன்றவைகள் தான் நர்த்தனமாடிக் கொண்டு இருக்கும். தன்மனத்திற்குள் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளாதவன் ஒரு கோவிலில் இருந்து மற்றொரு கோவில் என்று தொடர்ந்து சென்றாலும் மகிழ்சி கிட்டாது. எவ்வளவு சட்டங்கள் இயற்றினாலும் மக்களை இடத்தைவிட்டு இடம் ஓட்டினாலும் அவர்கள் மனநிலை பாதிக்கும். நாடுகளுக்கு இடையே போர் முளுவதற்கான நிலைதான் உருவாகும். மற்றவர் தங்களையே நம்பி வாழ வேண்டுமென்ற அதிகாரவெறி, எல்லைத்தகராறுகள் பொருளாதார ஆதிக்கம்



மாறுபட்ட அரசியல் சித்தாந்தங்களை கடைப்பிடிப்பதினால் பலத்த போட்டிகளும் போர்களுக்கும் காரணமாக அமைகின்றன. மமதையை விளக்கும் ஒருசிறு கதை முன்னோரால் பேசப்பட்டுவருகிறது. ஒரு வீட்டின் ஓரத்தில் ஒரு குழி. அதில் ஒருதவளை வசித்து வந்தது. குழிக்குப்பக்கத்தே வெள்ளிநாணயம் ஒன்று பிரகாசித்துக்கொண்டு இருப்பது அந்த தவளையின் கண்களுக்கு தென்பட்டது. அதை கண்டுமயங்கிய தவளை உடனே ஓடிச் சென்று அந்த வெள்ளி ரூபாயை எடுத்துக்கொண்டு தன்குழிக்குத் திரும்பி வந்தது. வெள்ளி ரூபாய் கிடைத்துவிட்டதால் இப்போது பணக்காரத் தவளையாகிவிட்டது. அதற்கு தலைக்கனம் வந்து உலகத்தையே அலட்சியமாகப் பார்க்க ஆரம்பித்துவிட்டது. ஆணவத்துடன் மற்ற தவளைகளை அதிகாரம் செய்ய ஆரம்பித்தும் விட்டது.

ஒரு நாள் ஒரு யானை அந்தப் பக்கம் நடந்து சென்றது. தவளை வசித்து வந்த குழியின் மீது காலை வைத்து யானை நடந்து சென்றது. 'நான் எவ்வளவு பெரிய பணக்காரன்? என் குழியை மிதித்து செல்ல எப்படி தைரியம் வந்தது. அந்த பிச்சைக்கார யானைக்கு பணக்காரர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பாடம் கற்பிக்கிறேன் என தன் பலம் முழுவதையும் உபயோகித்து பலமாகக் கத்தி நிறைய நேரம் திட்டியது. பின்கோபம் தணியாத தவளை, தன் இருபின்கால்களையும் தூக்கி பலமாக யானையை பலமுறைகள் உதைத்தது. பெருமையுடன் மீண்டும் தவளை தன்குழிக்குத் திரும்பிச் சென்று வெள்ளி ரூபாய்க்கு அருகில் படுத்துக் கொண்டது.

யானை தவளையின் கத்தலையும் கோபத்தையும் சிறிதுகூட உணராமல் நின்று கொண்டு இருந்தது. தவளையைப் போன்று சிலர் உலகம் தனக்கு அடிபணிய வேண்டுமென்று கத்துவதுதான் மிச்சம். பலமாகக் கத்தி சண்டை போடுவதனால் ஒருவன் தன் விரோதியை வென்று விட முடியாது. சண்டைபோடப் போட இன்னும் வெறியுடன் நீதியை நிலைநாட்டும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும் உலகம்.

# இந்துமதம் அவரவர் கடமைகளை வகுத்துத் தந்துள்ளது

ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை கற்பிக்கப்பட்டுள்ளது. தந்தை குடும்பத்தைப் பேணலும், தாய் குடும்பத்தை பராமரித்தலும், பிள்ளைகளை முறையாக வளர்த்தலும், செல்வந்தர்கள் சமுதாயத்திற்கு உதவிகள் செய்தலும் பொருளில்லாதவர் சமுதாயத்திற்கு உழைத்தலும், அரசாட்சி செய்பவர் நீதி வழுவாது ஆட்சி புரிதலும், படை வீரர் நாட்டைக் காப்பதும், வயதில் முதிந்தவர்கள் துறவு மனப்பான்மை பூண்டு அடுத்த தலைமுறையினர்க்கு வழிவிடுதலும் அவரவர் கடமைகளாகும். வயதான பெற்றோரைப் பேணுதல் மைந்தரின் கடமையாகும் என்று 'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே' என்ற வரி கடமையின் கட்டாயத்தை உணர்த்தி நிற்கின்றது.

கடமை என்ன என்பதை உணர்ந்து அதனை திறம்பட செயலாற்றுபவருக்கு பாராயணம், பூசை, வேள்வி, விரதங்கள் அனுட்டிப்பது, நாம சங்கீர்தனத்தில் திளைப்பது எல்லாம் கடமை ஆற்றுவதிலேயே அடங்கியுள்ளது. கடமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் மாறுபடுகின்றது. காலம், இடம் இவற்றிற்கு தக்கவாறு வேறுபடுகின்றது. நமது சாத்திரங்களை எவரெவர்க்கு என்னென்ன கடமைகள் என்பதை துல்லியமாக கூறியுள்ளார்கள். நான்கு வர்ணத்தினரான பிராமணர், சூத்திரர், வைஷ்ணவர், சஷ்திரியருக்குரிய கடமைகள் கூறப்பட்டுள்ளன.

புண்டரீகன் என்ற பக்தன் தனது வயோதிப தாய் தந்தையருக்கு சேவை செய்வது தனது பாக்கியமாகக் கருதினான். தனது பக்தன் இவ்வாறு கடமையாற்றுவதை நேரில் கண்டு மகிழ இறைவன் அவனது இல்லத்திற்கு வருகிறார். இறைவன் வந்திருப்பதை அறிந்ததும் அவருக்கு அருகில் கிடந்த செங்கற்களை எடுத்து ஆசனமாக கொடுத்து விட்டு தனது பணியைத் தொடர்கிறான். கடமையாற்றிவிட்டு அந்த பக்தன் வரும்வரை இறைவன் அவன் அளித்த கல்லின் மீது சந்தோஷமாக அமர்ந்திருந்து அவன் கடமையாற்றியதையே தனக்குச் செய்த பூசையாக ஏற்றுக்கொண்டு அருள்பாலிக்கின்றார். இது பண்டரீபுரத்தில் ஸ்ரீ பண்டரீநாதரின் வரலாற்றிலுள்ள கதை.



இதற்கு மாறாகச் செயற்பட்டான் கொங்கணவன் என்ற இளைஞன். வயதான தனது பெற்றோரை பற்றியும் தனது மனைவி மக்களைப் பற்றியும் சிறிதும் சிந்திக்காமல் காட்டிற்குத் தவம் செய்யக் கிளம்பி விட்டான். மேற்கொண்ட தவத்தினால் சில சித்துக்கள் கைவரப்பெற்றான். ஒருநாள் அவன் மரத்தின் கீழ் தவம் செய்யும் போது மரக்கிளையில் இருந்து கொக்கு அவன் மீது எச்சமிட்டுவிட்டது. அதனால் அவனது தவம் கலைந்துவிட்டது. தவம் கலையக் காரணமாக இருந்த கொக்கை மிகுந்த கோபத்துடன் நோக்கினான். கோபத்தின் உக்கிரத்தினால் கொக்கு எரிந்து சாம்பராகிவிட்டது. தனது தவவலிமையினால் இவ்வாறு நிகழ்ந்ததால் அவனுக்கு கர்வம் ஏற்பட்டுவிட்டது.

அடுத்த நாள் ஒருவீட்டிற்கு பிச்சை எடுக்க சென்றான் கொங்கணவன். வீட்டின் முன்நின்று "பவதி பிஷாம் தேகி" என்று இரண்டு மூன்று முறை குரல் கொடுத்தும் ஒருவரும் வராததினால் மிகுந்த கோபமடைந்தான். இல்லத்தரசி தனது கணவன், பிள்ளைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை முடித்த பின் சற்றுத் தாமதமாக வந்து தபசியை கவனித்தாள். மிகுந்த கோபத்திலிருந்த தபசி கொக்கை பார்த்தது போலவே கோபமாகப் பார்த்தாள். உடனே அந்த அம்மையார் "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவாய்" என்றாள். கொக்கை எரித்ததும், தனது பெயர் கொங்கணவன் என்பதும் இவ் அம்மையாருக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியப்பட்டார் தபசி. இதை அறிய வேண்டும் எனில் அடுத்த தெருவில் பணியாரக் கடை வைத்திருக்கும் கேசவனிடம் அறியலாம் என கூறினார் அம்மையார். மறுநாள் பொழுது விடிந்ததும் தபசி கேசவனிடம் சென்றார். அடுத்த தெரு அம்மையாரா உம்மை அனுப்பி வைத்தாள் என்று கேசவன் கேட்டதும் தபசிக்கு ஆச்சரியம் மேலிட்டது. தான் பெரிய தவம் ஒன்றும் செய்வதில்லை என்றும் தனது கடமைகளை ஒழுங்காக முடித்துவிட்டு நேர்மையாக வியாபாரத்தை கவனிப்பதுடன் இடைப்பட்ட நேரத்தில் இறைவனிடம் பிரார்த்தனை செய்வதனால் இறையருள் கிட்டுவதாகவும் கேசவன் தபசியிடம் கூறினார். அப்பொழுது தான் தனது குடும்பத்தாரை காக்க வேண்டிய கடமையை புறக்கணித்து விட்டு தவம் செய்ததால் தனக்கு இறையருள் கிட்டவில்லை என்பதை கொங்கணவன் உணர்ந்தார். ஒழுங்காகக் கடமையாற்றுபவர்களுக்கே இறைவன் அருள் புரிகின்றார் என்பதை கொங்கணவன் இதன் மூலம் அறிந்து கொண்டான்.

செயல் புரிய மட்டுமே உனக்கு உரிமை இருக்கிறது. அந்தச் செயலின் விளைவுகளில் அல்ல என்று கீதையில் கண்ணன் கூறியுள்ளார். அத்துடன் செயல்களின் பலனில் நமக்கே உரிமையில்லையே என்று செயல்களில் ஈடுபடாமல் இருக்கக் கூடாது. செயல்கள் புரிவது உனது கடமையாகும் என்கிறார்.

'செயல்கள் புரிந்துதான் ஆக வேண்டியது என்று எனக்கு ஒன்றுமேயில்லை. இருப்பினும் நானே செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கிறேன். ஆகையால் பலன்கள் எவ்வாறு இருக்குமோ என்ற அச்சத்தில் நீ செயல்களைப் புரியாமல் இருக்காதே' என்று கண்ணன் அர்ச்சுணனிடம் கூறினார். 'கடமையை செய், பலனை எதிர்பாராதே' என்பதே இதன் உட்கருத்து ஆகும். தனக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் கடமையாற்றிக் கொண்டேயிருந்தால் பந்தத்தாலும் பாசத்தாலும் 'தான்' என்ற அகந்தையாலும் ஏற்படும் கவலைகளைக் குறைத்துக் கொள்ளலாம். அத்துடன் ஆன்மீக மேம்பாடும் அடையமுடியும்.

**நா.க.சிவராமலிங்கம்**

குடும்ப கடமைகள், அலுவலக கடமைகள், சமுதாயக் கடமைகள், நாட்டுக்கான கடமைகள், ஆன்மீகக் கடமைகள் இவையனைத்தையும் சரிவர ஆற்றும் போது மனிதன் நிறை மனிதனாகப் பூரணத்துவம் பெற்றுவிடுகிறான்.

கடமை உணர்வு என்னும் போது நம் மனக்கண்ணில் தோன்றுபவர்கள் கர்ணனும். கும்பகர்ணனுமாவர். இவர்கள் கர்ம வீரர் எனப் போற்றப்படுகின்றனர். உறையுளும், உடையும், உண்டியும் வழங்கிக் காத்த அண்ணல் இராவணனுக்கு முன் உயிர் துறத்தல் தனது கடமை, உண்டவர்க்கு உரியது எனப் போர்க்களத்தில் உயிர் நீத்தான். கோலமும் கொற்றமும் தந்து காப்பாற்றிய துரியோதனனுக்காக உயிர் நீத்தான் கர்ண மாமன்னன். இவர்கள் கடமையில் சிறந்த உதாரண புருசர்கள்.




Niru
Niru
நிரு
பிராண்ட்
Niru BRAND ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE
Niru BRAND
Drained Weight/
Poids Égoutté/ 300g.e
Net Weight 425g.e

# முடி உதிர்வதை தடுக்க

### கடந்த இதழ் தொடர்ச்சி

(163) முளைக்கீரை - இந்தக்கீரையில் அதிக விற்ரமின்களும், இரும்புச்சத்தும், பொஸ்பரஸ் (Phosphorus ), கல்சியம் போன்ற தாதுப்பொருட்களும் உண்டு எனவே இதை அதிகம் பாவித்தால் நல்ல பலன் பெறலாம்.

(164) முருங்கைக்கீரை - முருங்கைக்கீரையில் அதிகளவு விற்ரமின் 'ஏ', 'சீ', தாதுப்பொருட்கள் உள்ளன எனவே இதை தாராளமாக உணவில் சேர்ப்பதால் உடல் ஆரோக்கியம் பெருகும்.



## பரம்பரை வீட்டு வைத்தியம்

டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com

(165) முடி வளர - கோவையிலையை அவித்து தலைக்கு தேய்த்து முழுகினால் முடி நன்கு வளரும். பொடுகு, சிரங்கு இருப்பின் வெங்காயச்சாற்றை தலைக்கு தேய்த்து முழுகினால் அவை குணமாகிவிடும். உணவில் கருவேப்பிலை துவையல், வெங்காயம், கீரை பால், பூசணிக்காய் இவற்றை சேர்த்துக்கொள்ளவும். கருவேப்பிலையை நல்லெண்ணையில் பொரித்து அந்த எண்ணையை தலைக்கு தேய்த்துவந்தால் கூந்தல் கறுக்கும். நரை நீங்கும். பரம்பரை வழுக்கை இல்லாவிடில் யானைத்தந்தத்தை அரத்தினால் அராவி அந்தத்தூளை பாத்திரத்தில் இட்டு வறுத்து தேங்காய் எண்ணையுடன் மசித்து வழுக்கை விழுந்த இடத்தில் தடவி பலமாக உரஞ்சவேண்டும். வழுக்கை நீங்கி முடிவளரும்

(166) முடி நரை நீங்க - ஒரு தாமரைப்பூவை இரண்டு அவுன்ஸ் நீர்விட்டு அவித்து ஒரு அவுன்ஸ் ஆனதும் இறக்கி ஆறவிட்டு அதில் அரை அவுன்ஸ் காலையிலும், அரை அவுன்ஸ் மாலையிலும் பனம் வெல்லத்துடன் குடித்தால் இளநரை குணமாகும். உணவில் வெங்காயம், கரற், முட்டை பசுப்பால், நெய் சேர்க்கவும். அதிமதுரத்தூள், கசகசாத்தூள் பசுப்பால் இவற்றை கலந்து தலைக்கு தப்பி வாரம் இருமறை முழுகிவந்தால் இளநரை குணமாகி முடி கறுக்கும்.

மஞ்சள் கரிசலாங்கண்ணி இலைச்சாறு, அவுரி இலைச்சாறு, மருதாணி இலைச்சாறு, இவற்றை ஒவ்வொன்றாக இடித்து பிழிந்து கலந்து அதனுடன் செம்பருத்திப்பூவை துவைத்து பிழிந்து இந்த சாற்றுடன் சேர்க்கவும். இவற்றுடன் நல்லெண்ணையையும் கலக்கவும். இதற்குள் பசுப்பாலையும் கலக்கவும். இந்தக்கலவையை ஒரு இரவுநேரம் மூடிவைக்கவும். பின் இக்கலவையை மூன்று நாட்கள் வெய்யிலில் காயவைக்கவேண்டும் இதற்குள் மல்லிகைப்பூவை போட்டு ஒரு இரவு மூடிவைக்கவும். நான்காவதுநாள் அடுப்பிலேற்றி மூன்றுமணி நேரம் காய்ச்சவேண்டும்.

இப்படிக்கொதிக்கும் கலவையில் எலுமிச்சம்பழத்தை பொடிபொடியக அரிந்து போடவும். ஒருமணிநேரம் அடுப்பில் வைத்து கலவை நன்கு இறுகியதும் அதற்குள் பச்சைகற்பூரத்தை தூளாக்கி போடவேண்டும். இந்தக்கலவையை இறக்கி நன்கு மூடி இரண்டு நாள் ஆற விடவேண்டும். இப்போது கலவை நன்கு இறுகிப்போயிருக்கும் இதைப்பிழிந்தால் நல்ல வாசனைனயுள்ள தைலம் கிடைக்கும். இதனை தினம் தலைக்கு தடவிவந்தால் முடிகொட்டுதல், செம்படை, இளநரை சகலதும் குணமாகி கூந்தல் கார்மேகம்போல் வளரும்.



(167) முடி உதிர்வதை தடுக்க - தலை முடி உதிர்வதை தடுக்க வெந்தயத்தை அரைத்து தலையில் தப்பி முழுகிவந்தால் முடி உதிர்வது நின்றுவிடும், முடியும் கறுக்கும். முடி உதிர்வதை தடுக்க அதிக நெல்லிக்காய் சேர்ந்த 'திரிபலா'என்னும் லேகியத்தை தினம் தின்றுவந்தால் முடி உதிர்வது நின்றுவிடும். பிள்ளைப்பேறுக்கு பின் முடி உதிரவதற்கும் இந்த திரிபலா லேகியம் பெரிதும் உதவும். தினம் நெல்லிக்காய் தின்றாலும் முடிவளரும். இளம் வயதினருக்கு திடீரென முடிவிழுந்து வழுக்கை ஏற்பட்டால் 8 கிராம் மிளகு 15 கிராம் எருக்கம் வேர்ப்பட்டையை வெயிலில் காயவைத்து சேர்த்து இடித்து வெல்லத்துடன் சேர்த்து இடித்து சிறுமாத்திரைகள் செய்து அதில் தினம் இரண்டு மாத்திரைகள் மோரில் காலை, மாலை குடித்து வந்தால் வழுக்கை குணமாகும். கடுமையாக முடி உதிர்ந்தால் ஊமத்தங்காயை இடித்து சாறு எடுத்து தேங்காய் எண்ணையில் காய்ச்சி அந்த எண்ணையை தலைக்கு பூசி கிழமையில் இரண்டு நாட்கள் முழுகிவந்தால் முடி உதிர்வது நின்றுவிடும்.

(168)முடியை உதிரவைக்க - தேவையற்ற இடங்களில் முடிவளர்ந்தால் அதை உதிரவைக்க மருந்துக்கடையில் விற்கும் பொன்னாதாரம் என்னும் மருந்தை வாங்கி சந்தனக்கல்லில் வைத்து தண்ணீர்விட்டு அரைத்து முடி உதிரவேண்டிய இடத்தில்மாத்திரம் பற்றுப்போட்டால் முடி உதிர்ந்துவிடும். பற்றுப்போட்டு சில நேரத்தில் அதிக காந்தல் இருந்தால் கழுவிவிடவும். அதன்பின்னும் காந்தல் இருந்தால் சந்தனத்தை அரைத்து தேங்காய் எண்ணையுடன் கலந்து பூசினால் காந்தல் குறையும். மஞ்சள் செடியின் இலைகளை கொய்து எடுத்து வெய்யிலில் காயவைத்து தூளாக்கி அந்தத்தூளுடன் தேங்காய் எண்ணை கலந்து இரவில் முடி உதிரவேண்டிய இடங்களில் பூசிக்காலையில் கழுவி விடவும். இப்படி சிலநாட்கள் பூசினால் முடி உதிர்ந்துவிடும். தாளகம் அல்லது அரிதாரம் மருந்தை கடையில் வாங்கி அரைத்து சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்து முடி உதிர வேண்டிய இடத்தில் பூசி காந்தல் கண்டதும் கழுவி விடவும். கடும் காந்தல் இருந்தால் சந்தனத்தை அரைத்து தேங்காய் எண்ணையுடன் சேர்த்து பூசினால் காந்தல் நின்றுவிடும்.



## ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது

**Future Investment**
Senior Home
1.5 Acre
70 units acre
Whitby

**BANQUET HALL**
5 Split party hall
27,000 sqft.
975 seats-at HWY 400 80 parking
3 split 500/300/200

ஏக்கர் நிலம் வருமானத்துடன்
Beach, Cottage

வீடும் வியாபாரமும் *Business Zoning*

Metal Recycling
**Auto Body Shop**
Yunk Yard 2 Acres land with
**House and Basesemt**
**PAINT AUTO BODY SHOP**
**2300 SQFT. WITH RUNNING BUSINESS- KIPLING & STEELES**

$175,000

**Auto Body shop**
House with Basement
Yunk Yard
**10 acres**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

MCCOWAN & ELLESMERE - Big lot House with bsmt apt. FOR LEASE . 5 parking

## MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# WELCOME TO GTA SQUARE

## Occupancy: summer 2007

| | | | |
|---|---|---|---|
| Medical Office | Pharmacy<br>Anoja Thevaranjan<br>416-754-1400 | Book Depot<br>416-285-9118 | Jewellery Store |
| Studios | Leather Store<br>Computer Store | Cake House | Lawyer Office |



**FIRST SOUTH ASIAN INDOOR MALL IN GTA**

| | | | |
|---|---|---|---|
| Mortgage Broker<br>Tax Consultant | News Paper Office | Textile<br>Money Trasfer | Telecommunications<br>Tai Restaurant |
| Convenience Store | Salon | Dry Cleaners & Alterations | Dollar Store |

## Many more Business are Coming
## For Lease As Low As $950

HOMELIFE HIGHER STANDARDS

**Call: NEL KETHARANATHAN**

SALES REPRESENTATIVE

**416.677.4707 / 416.321.6969**

HomeLife GTA Realty Inc., Brokerage*

*Independently Owned & Operated



# மாமல்லபுரம்



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்-16

கல்லும் கவிபாடும் மயக்கும் பொன்மாலைப் பொழுது... கடலலைகள் தாலாட்ட, கற்கள் கவிபாட, சாயும் கதிரவன் வானில் தீட்டும் வண்ண ஓவியங்கள் எங்களை வேறோர் உலகத்துக்கே அழைத்துச் செல்கின்றன. பொன் மணற் கடற்கரை, உலகப் புகழ்பெற்ற சிற்பங்கள், சித்திரங்கள், காலத்தைக் கடந்து நிற்கும் குடைவரைக் கோயில்கள், பிரமாண்டமான புடைப்புச் சிற்பங்கள்... என்று எங்களைப் பிரமிக்கச்செய்யும் அந்த ஊர் மாமல்லபுரம். தமிழ்நாட்டிற்கே தனிப்பெருமை அளித்துவரும் சிற்பக் கருவூலம்.

சென்னையில் இருந்து தெற்கே 60 கி.மீ. தொலைவில், ஒன்றரை மணி நேர கிழக்குக் கடற்கரைச் சாலை இனிமையான பயணத்துக்குப் பிறகு, “மாமல்லபுரம் நகராட்சி உங்களை வரவேற்கிறது” என்ற அறிவிப்பு பலகையுடன் வரவேற்கிறது மாமல்லபுரம்.

பழங்காலத்தில் பல்லவர்களின் துறைமுகத் தலைநகராக விளங்கிய நகரம் இது. அதன் சுவடுகளை இன்றும் மாமல்லபுரத்தில் பார்க்க முடிகிறது. தற்காலத் தன்மையுடன் இருக்கும் ஒரு பழங்கால நகரம் போல்தான் இருக்கிறது மாமல்லபுரம். இங்கே நீங்கள் தடுக்கிவிழுந்தால், ஒரு சிற்பத்தின் மேல்தான் விழவேண்டும். அந்தளவுக்கு எங்கே பார்த்தாலும் சிற்பக்கடல்தான்.

“அக்காலத்தில் கடல்மல்லை, மாமல்லை என இரண்டு பெயர்களில் இந்நகரம் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது” என வழிகாட்டிகள் மாமல்லபுரத்தின் பழங்காலப் பெருமையைப் பற்றி பேசத் தொடங்கினார்கள். “கடலுக்கும் மலைக்கும் அருகே இருப்பதால் கடல்மலை என வழங்கப்பட்டு, அது கடல்மல்லை என்றாகியிருக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



**வழிப்போக்கன்**

முதலாம் நரசிம்மன் காலத்தில்தான் இங்குள்ள கல்தேர்கள் அமைக்கப்பட்டன. நரசிம்மனுக்கு மாகாமல்லன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அவன் பெயரால் மகாமல்லபுரம் என வழங்கப்பட்டு, பிறகு மாமல்லபுரம் என்றாகியிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

மாமல்லபுரத்தில் நாங்கள் முதலில் சென்றது கடற்கரையில், கடல் அலைகள் முத்தமிடும் இடத்தில் உள்ள கோயில்களுக்குதான். தமிழர்கள் கட்டடக் கலையின் பெருமையாக கம்பீரமாக நிற்கிறது கடற்கரைக் கோயில்கள். மாமல்லபுரத்தின் முக்கியத்துவமே உலகப்புகழ் பெற்ற இந்தக் கடற்கரை கோயில்கள்தான். இராசசிம்மன் காலத்தில் உருவாக்கப்பட்ட இக்கோயில் முழுவதும் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு ஒன்றுடன் ஒன்று இணைந்த மூன்று சந்நிதிகள் உள்ளன. அதற்கேற்ப மூன்று தனித்தனி விமானங்களும் உள்ளன. இதில் சிவன், திருமால் உருவங்கள் உள்ளன. திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் இருப்பதைப்போல் திருமாலை ஒரு கையை தலைக்கு வைத்துப் படுத்துக்கொண்டு

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

சென்னையில் இருந்து 60 கி.மீ. தொலைவில், ஒரு மணி நேரப் பயணத்தில் இருக்கிறது மாமல்லபுரம். சென்னை - மாமல்லபுரம் கிழக்கு கடற்கரைச் சாலை பயணமே ஓர் இனிமையான அனுபவம். பல தமிழ் திரைப்படங்களில் இச்சாலை நடித்திருக்கிறது. “காக்க காக்க” திரைப்படத்தில் சூர்யாவும் ஜோதிகாவும் இச்சாலையில் செல்லும் பாடல் காட்சி மிகப்பிரசித்தி பெற்றது. சென்னையில் இருந்து அடிக்கடி மாமல்லபுரத்திற்கு பேரூந்துகள் உள்ளன. கிழக்கு கடற்கரைச் சாலையில் நட்சத்திர அந்தஸ்துள்ள நிறைய உணவகங்களும் தங்கும் விடுதிகளும் உள்ளன. மாமல்லபுரத்திலும் எல்லா தரத்திலும் நல்ல ஹோட்டல்கள் உள்ளன.

இருக்கும் அனந்தசயன நிலையில் வடிவமைத்துள்ளார்கள். அலை அடித்து, கடல் நீரால் கோயில் சேதமடையாமல் இருக்கக் கற்களைக் கொண்டு சுவர்களை எழுப்பி உள்ளார்கள்.

கடற்கரைக் கோயிலைப் பார்த்துவிட்டு, வெளியே வந்து மிதிவண்டியில் சுக்காப்பி விற்பவரிடம் தொண்டைக்கு இதமாக சுக்காப்பி குடித்துவிட்டு அடுத்து ஐந்து கல் இரதங்கள் என அழைக்கப்படும் ஒரே கல்லிலான ஐந்து கல் தேர்கள் பார்க்கச் சென்றோம். மாமல்லபுரம் குகைக் கோயில்களுக்குத் தெற்கே இந்த இரதங்கள் உள்ளன. திரௌபதி
உட்பட பஞ்ச பாண்டவர் பெயர்களைத் தாங்கி நின்று, நான்கு வகையான கோபுர அமைப்புகளுடன் விளங்குகின்றன இத்தேர்கள். ஐந்து கல் தேர்களில் தருமராசா தேரே மிகப் பெரியதும் அழகிற் சிறந்ததும் ஆகும். இதன் உயரம் 39 அடி. இங்குள்ள கல்வெட்டு இதனை “அத்தியந்த காமப் பல்லவேச்சுர கிருஹம்” என அழைக்கிறது. இதிலிருந்து இது சிவபெருமானின் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்கிறோம். சிவபெருமானுக்காக அமைக்கப்பட்டுள்ள இன்னொரு தேர், அர்ச்சுனன் தேர். இது துரோபதைத் தேருக்கு அருகே உள்ளது. சதுரமான அமைப்புடன் காணப்படும் இத்தேர் புத்தவிகாரின் அமைப்பை நினைவூட்டுகிறது. இத்தேருக்குப் பின்புறம் படுத்திருக்கும் நிலையில் நந்தியின் சிலை உள்ளது. அர்ச்சுனன் தேருக்கு அண்மையில் உள்ள பீமன் தேர் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. செவ்வக வடிவிலான பாறையைக் குடைந்து இத்தேரை வடிவமைத்து உள்ளார்கள்.

இந்தத் தேர்களுக்கு சற்றுத் தள்ளி, தனித்து நிற்கிறது சகாதேவன் தேர். சகாதேவன் தேரைப் பார்த்துகொண்டிருக்கும் போதே, அடுத்து பகீரதன் தவம் போவதா அல்லது மீதமுள்ள தேர்களையும் பார்த்துவிடுவதா என எங்களுக்குள் விவாதம். கடைசியில் கணேசன்



தேர், பக்கிங்காம் கால்வாய்க்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள வலையான் குட்டைத் தேர், அதற்கு வடபுறம் உள்ள பிடாரித் தேர்கள்... அனைத்தையும் பார்த்துவிட்டுதான் பகீரதன் தவம் பார்க்கப் புறப்பட்டோம்.

“பகீரதன் தவச் சிற்பக்காட்சி உலகச் சிற்பக்கலைஞர்களின் பாராட்டுதலைப் பெற்றது” என்றபடியே வரவேற்றார்கள் அங்குள்ள

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# வீதி விபத்துகளின் முறைப்பாட்டு நிலையங்கள்!

## Collision Reporting Centers

அதிகரித்து வரும் ஒவ்வொரு சிறு சிறு வீதிவிபத்துகளுக்கும் விபத்து நடந்த அதே இடத்தில் நின்று விபத்து தொடர்பாக சட்ட ரீதியாக முறைப்பாடு செய்வதற்கு பொலிசாரை அழைத்தால், பொதுவாக, பொலிசாரின் ஏனைய அவசர பணிகளுக்கு மத்தியில் இச் சிறுசிறு விபத்துகளுக்காக விபத்து நடந்த இடங்களுக்கு எல்லாம் துரித கதியில் வந்து சேர முடியுமா?

இவ்வாறு வந்து சேர்ந்தாலும் எவ்வளவு தூரம் விபத்தின் புலனாய்வுக்கும், காப்புறுதி கம்பனியின் நட்டஈடு கோரலுக்கும் உதவமுடியும்?


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


இத்தகைய விபத்துக்கு உள்ளாகியவர்களின் சிரமங்களை போக்கி, விபத்து தொடர்பான புலனாய்வுகளை செய்து, நட்டஈடுகளை காப்புறுதிநிறுவனங்களோடு முன் எடுப்பதற்கும், பொலிஸ் திணைக்களம், காப்புறுதி நிறுவனங்கள், மற்றும் சில தனியார் நிறுவனங்களை பங்குதரார்களாக கொண்டு இலவசமாக சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே "Accident Support Services International Ltd" ஆகும். 1994ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் ரொறொன்ரோவில் முதன் முதலில் ஆறு வாகன காப்புறுதி நிறுவனங்களின் அங்கத்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஏராளமான காப்புறுதி நிறுவனங்களின் அங்கத்துவத்துடன் ஒன்ராரியோ மாகாணத்தின் பல்வேறு நகரங்களுக்கும் இக்கம்பனியின் "விபத்து முறைப்பாட்டு நிலையங்கள்" விஸ்தரிக்கப்பட்டு வாரத்தில் ஏழுநாட்களும், இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கி கொண்டே இருக்கிறது.

மாகாண வீதி ஒழுங்கு சட்டப்படி வாகனங்களுக்கு ஏற்படும் விபத்துகளின் செலவுகள் $1000 டொலருக்கு மேல் இருந்தால் மட்டும் இங்கு கண்டிப்பாக முறைப்பாடு செய்யப்படல் வேண்டும் என இருந்த போதும், விபத்துக்கு உள்ளான ஒரு பக்கத்தினரின் முறைப்பாடு இங்கு பதியப்படும் போது, மற்றவரும் கட்டாயமாக, விபத்தின் போது வாகனத்தினை செலுத்தியவர் வாகனத்துடன் வந்து முறைப்பாடு வழங்கியே தீர வேண்டும் என்பது சட்டவிதி முறையாகும்.

இவ்வாறு முறைப்பாட்டினை குறிப்பிட்ட ஒரு கால இடைவெளிக்குள் செய்ய தவறியவர்கள் பண தண்டனை & புள்ளி மதிப்பீட்டு இழப்பு (Fine & Demerit Points Loosing) என்ற தண்டனையின் எதிர் கொள்ள வேண்டிவரும். நீண்ட ஒரு விண்ணப்ப படிவத்தில் விபத்து தொடர்பான புலனாய்வுக்குரிய தகவல்களை கேட்கப்பட்டு, வரை படங்களுடன் வழங்கப்படல் வேண்டும். வாகனத்தில் விபத்துக்கு உள்ளான பாதிப்புகள் படம் பிடிக்கப்படும்.

இரு பக்க புலனாய்வுகளின் பின்பு இவ்விபத்து தொடர்பான தகவல்களை சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுக்கு இந் நிறுவனத்தினர் அனுப்பி வைப்பார்கள். அந்நிலையத்தில் இருந்தே காப்புறுதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நட்ட ஈடு கோரிக்கையினை முன் எடுப்பதற்கு இங்கு உள்ள ஊழியர்கள் வழிகாட்டுவார்கள்.

இந்நிலையம் விபத்துக்கு உள்ளானவர்களுக்கு துரிதகதியில் புலனாய்வு தொடர்பான உதவிகளை செய்து, இது தொடர்பாக ஒரு முடிவினை எடுத்து காப்புறுதி நிறுவனங்களோடு நட்ட ஈடு கோரலுக்கு காப்புறுதி நிறுவனங்களுக்கும், விபத்துக்கு உள்ளானவர்களுக்கும் துரித கதியில் இலகுவான முறையில் வழிகாட்டுகின்றது. முரண்பாடுகள் ஏதாவது ஏற்பட்டால் வழங்கப்பட்ட தகவல்கள், வாகனத்தில் சேர்ந்து போகாதோரின் சாட்சிகள், வாகனத்தின் பாதிப்புகளை வைத்து சிறப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினர் துப்பு துலக்கி உண்மையினை கண்டு பிடித்து தங்கள் அறிக்கையினை வழங்குவார்கள்.

ரொறொன்ரோவில் இவ்விபத்துகளின் முறைப்பாட்டு நிலையங்கள் பின்வரும் முகவரிகளில் உள்ளது.

1. 39, Howden Road
Scarborough, ON
Phone - 416.701.1600
(Birchmount & Lawrence)

2. 855, Oxford St.
Toronto, ON
Phone - 416.252.1200
(Islington Ave. / Queen Elizabeth Way)

3. 113, Toryork Drive
Northyork, ON
Phone - 416.745.1600
(Finch Ave. West/Weston Road)

"பிக்கரிங்", "அஜெக்ஸ்" நகரங்களில் விபத்துக்கு உள்ளானவர்கள் பின்வரும் முகவரிகளில் முறைப்பாடு செய்தல் வேண்டும்.

***1710, Kingston Road***
***Pickering, ON***
***Phone - 905.619.1210***

ஒன்ராரியோ மாகாணத்தில் லண்டன், ஹமில்டன் போன்ற நகரங்கள் உட்பட ஏனைய பல நகரங்களில் இம்முறைப்பாட்டு நிலையங்கள் இருந்தாலும், தமிழர்கள் அதிகமாக வசிக்கும் மார்க்கம், றிச்மண்ட்ஹில், அரோரா நகரங்களில் இதுவரை இந்நிலையங்கள் உருவாக்கப்பட வில்லை.

இம்முறைப்பாட்டு நிலையங்கள் இல்லாத நகரங்களில் விபத்து நடந்தால், இவர்கள் ஏனைய நகரின் முறைப்பாட்டு நிலையங்களில் போய் முறைப்பாடு செய்ய முடியாது. அந்தந்த நகரங்களில் நடந்த விபத்தினையே புலனாய்வுக்கு எடுத்து கொள்வார்கள்.

சரி! ஒரு நகரத்தில் "விபத்து முறைப்பாட்டு நிலையம்" இருந்ததோ? இல்லையோ? எந்த சந்தர்ப்பங்களில் விபத்து நடந்த இடத்தில் நின்று அசையாது, அந்த இடத்திற்கு பொலிசாரை அழைக்க வேண்டும். பொலிசாரும் அந்த இடத்திற்கு நேரடியாக வந்து புலனாய்வினை நடத்த வேண்டும். அந்த விபத்து நிலைமைகளை பின்வருமாறு ஏழு பிரிவுகளாக வகுத்துள்ளார்கள்.

1. The Collision Involves Injury or Death
(விபத்தின் போது ஒருவருக்கு உடல் காயம் அல்லது மரணம் ஏற்பட்டிருந்தால்)

2. Criminal activity is involve in the collision example - suspicion of alcohol, stolen vehicle, assault etc.
(விபத்தின் போது ஏதாவது கிரிமினல் சம்பவம் நடந்தால், உதாரணமாக மதுபோதையில் விபத்து, திருடப்பட்ட வாகனத்துடன் விபத்து, ஏதாவது தாக்குதல் அடிபாடு நடந்திருந்தால்)
விபத்து தொடர்பாக முறைப்பாடு செய்ய செல்லும் போதோ அல்லது வீதியில் பொலிசாரின் விசாரணைக்கோ தேவைப்படும் பத்திரங்கள் மூன்று
1. சாரதி அனுமதி பத்திரம்
2. வாகன உரிமை பத்திரம்
3. வாகன காப்புறுதி பத்திரம்

இவை மூன்றும் எந்த நேரமும் கையில் இருக்க வேண்டும். இல்லையேல் அதற்குரிய பண தண்டனையினை எதிர் கொள்ள வேண்டி வரும்.

3. The collision involves federal, provincial or municipal vehicle)
(மத்திய, மாகாண, நகரசபை ஆகிய அரசுக்குச் சொந்தமான வாகனங்களுடன் விபத்து நடந்தால். உதாரணமாக ரொறொன்ரோ போக்குவரத்து சபையின் பேரூந்து வண்டியுடன் மோதலை இங்கு குறிப்பிடலாம்.

4. The collision involves vehicles transporting dangerous goods
(ஏதாவது ஆபத்தான பொருட்களை ஏற்ற செல்லும் வாகனங்களுடன் ஏற்பட்ட மோதல்

5. The Collision involves a person who is uninsured or is a suspended driver.
(காப்புறுதி இல்லாத அல்லது சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்ட சாரதியின் வாகனம் ஒன்றுடன் மோதல் ஏற்பட்டால்)

6. The collision involves damage to private, municipal or highway property.
(விபத்தின் போது, ஏதாவது தனியாரின் அல்லது நகரசபையின் அல்லது வீதியோ, உடமைகள் ஏதாவது ஒன்றினை நாசமாக்கினால்)

7. The Collision Involves Bicycles or Pedestrians.
(சையிக்கிளில் செல்பவர்கள் அல்லது நடந்து செல்பவரை மோதினால்)

மேற்குறிப்பிட்ட ஏழு நிலைப்பாடுகளையும் தவிர மற்றும் ஏனைய விபத்துகள் யாவற்றிற்கும் விபத்துக்கு உள்ளான மற்றவரின் தகவல்களை பெற்று கொண்டு (தகவல்களை தர மறுத்தால் வாகன இலக்கத்தினை குறித்துக் கொண்டு) நேரடியாக முறைப்பாட்டு நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்தல் வேண்டும்.




APARTMENTS FOR RENT

TWO MONTHS FREE RENT



***In a NEWLY Renovated High-Rise Apartment Building***
***Clean, Utilities inclu. Free parking.***
***Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**





SMILE

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days

# பரிதாபத்துக்குரிய பாசம்

## ஓடும் நீர் உறைவதில்லை 36

உலகில் என்றும் தனித்துவமானது எது என்ற கேள்விக்குப் பலர் பலவிதமான கருத்துக்களைக் கூறுவார்கள். ஒவ்வொருவரும் அவரது எதிர் பார்ப்புக்களையும் சொந்த அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது தெரிவுகளை வெளிப்படுத்துவார்கள். மிகமிகக் குறைந்த எண்ணிக்கை யுடையவர்களே இந்தக் கேள்விக்குச் சரியான பதிலைக் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு பெரும்பாலானவர்களால் உடனடியாக உணரப்படாமல் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் அது இலவசமாகக் கிடைப்பதனால் அதற்கு ஒரு பெறுமதியைக் கொடுக்க முடியாமல் இருப்பது தான்.

ஒருவரால் உரிமை கொள்ளக்கூடிய அத்தனை பௌதீகச் சொத்துக்களாலும் ஈடுசெய்ய முடியாத ஒன்று தான் அது. அதற்கு ஒரு பெறுமதியைக் கொடுப்பதற்கு மனிதனால் இதுவரையில் எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. இனிமேலும் கண்டுபிடிக்கப் போவதுமில்லை. அந்த அளவிற்கு மகத்துவமான, மனித இனத்திற்கு மட்டுமன்றி சகல உயிரினங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் இந்தக் கொடை, பௌதீக அடிப்படையில் அல்லாமல் உள்ளத்தின் அபரிமிதமான உணர்வால் தோற்றம் பெறுவதால் அந்த உணர்வுக்கு இணையாக உலகில் எதுவுமே இல்லை. இதனால் தான் இது மகத்துவமான மட்டுமல்ல, தனித்துவமானதும் கூட. இந்த மத்துவமும், தனித்துவமும், பிரதியீடுமற்ற உணர்வு எது? அதுதான் தாய்ப்பாசம்.

தாய், தாய்ப்பாசம், தாய்நாடு, தாய்மொழி என்றெல்லாம் கூறும்போது நாம் ஒரு விடயத்தை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளோம். இவையனைத்தும் தன்னிகரற்றது என்பது தான் அது. இக்கட்டுரையில் தாய்ப்பாசம் பற்றிய விடயங்களைப் பார்ப்போம். தாய்ப்பாசம் என்பது என்ன என்பதற்கு ஒது தாயால் கூட சிறப்பான விளக்கத்தைக் கொடுக்க முடியாது. அது ஒரு மகத்தான உணர்வு. வார்த்தைகளுக்கும் விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டது. ஒரு தாயின் உயிருடன், உயிர் மூச்சுடன் இரண்டறக் கலந்து இயங்கும் ஒரு சக்தி என்பது கூட அதன் உண்மையான தன்மைக்கு உரிய விளக்கமல்ல.

இந்தத் தாய்ப்பாசம் ஒரு வாழ்வியல் தியாகம். அபரிதமான அர்ப்பணிப்பு. உணர்வுகளை ஒரு முகப்படுத்திய உயர்வான செயற்பாடு. இரு உயிர்களின் உள்ளார்ந்த ரீதியான தொடர்புபடுத்தல். உணர்வு ரீதியான தன்னலமற்ற கொடை. கொடுப்பதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்காதது. குறிப்புணர்ந்து கொடுக்கும் தன்மை கொண்டது. இதனால் தான் ஒவ்வொரு உயிரும் பிறக்கும் கணத்திற்கு அப்பால் தன்னைக் கொண்டு செல்ல முடிகிறது.

நாம் பிறந்தவுடன் நமது உணர்வுகளைத் தெளிவாகத் தெரியப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பதில்லை. காரணம் புரியாத ஒரு சிரிப்பும், காரணம் புரியாத ஒரு அழுகையையும் தான் நமது உணர்வுகளை வெளிப்படுத்தும் முறைகளாக அமைகின்றன. நமது தேவைகளை நம்மால் வெளிப்படுத்த முடியாத நிலையில் தான் நமது வாழ்க்கை ஆரம்பமாகின்றது. இவ்வாறு எதையும் வெளிப்படுத்தமுடியாத, எதிர்பார்க்க முடியாத வாழ்க்கையை நாம் ஆரம்பிக்கும்போது நமது தேவைகளை முன்னுணர்ந்து பூர்த்தி செய்யக்கூடிய சிறப்பான தன்மை தான் இந்தத் தாய்ப்பாசத்தின் அடிப்படை. நமது உணர்வுகளாலோ அல்லது வார்த்தை களாலோ மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு நமது தேவைகளைப் பெறக்கூடிய நிலைக்கு நாம் வரும்வரை குறிப்பால் உணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய இயற்கையான கொடையாகிய அந்தப் பாசம் தான் நாம் ஒவ்வொருவரும் உயிர்வாழ்வதற்கான காலத்தை அந்த நிலைவரை நீடிக்கிறது. எனவே இந்த உணர்வு பூர்வமான தொடர்புகொள்ளல் ஒரு தாய்க்குரிய தனித்துவமான கொடை. வேறு எவராலும் ஈடு செய்யமுடியாத ஒன்று.

நமது வார்த்தைகளுக்கும் விளக்கங்களுக்கும் அப்பாற்பட்ட சிறப்புடைய இந்தத் தாய்ப்பாசம் குழந்தைகளின் வளர்ச்சிக்கேற்ப அதன் செயற்பாட்டையும் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் உண்டு என்பதை உணர்ந்திருத்தல் வேண்டும். ஏற்கனவே கூறிய விடயம் ஒன்றை இன்னொருமுறை சிறிது அழுத்தமாகக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. அதாவது ஒரு குழந்தை பிறந்து தனது விருப்பு வெறுப்புக்களை உணர்வுகளாலே அல்லது வார்த்தைகளாலோ வெளிப்படுத்தும் நிலைக்கு வரும்வரை தாயானவள் குறிப்புணர்வாலும், உள்ளத்துணர்வாலும் அதன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றாள் என்பது தாய்ப்பாசத்தின் இயல்பு என்பது மறுக்கப்பட முடியாது உண்மை. இங்கு அந்தக் குழந்தையின் தேவைகள் தாயின் புனிதமானதும் ஒரு தலைப்பட்சமானதுமான தீர்மானங்களால் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது வெள்ளிடைமலை. இங்கே இவ்வகையான தீர்மானங்கள் அவசியமானவை என்பதும் உண்மை.

ஆனால் ஒரு குழந்தை தனது தேவைகளை வெளிப்படையாகத் தெரியப்படுத்தக் கூடிய நிலையை அடையும் போது, அதன் உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்தும் தகைமையை பெற்றிருக்கும் போது குழந்தைகளின் உடலியல் உளவியல் வளர்ச்சிக்கேற்ப தாய்ப்பாசத்தின் செயற்பாடுகளும் மாற்றமடையவேண்டியதை அறியாத, அல்லது அறியவிரும்பாத அல்லது அறிந்தும் மாற விரும்பாத இந்தத் தாய்ப்பாசங்கள் பரிதாபத்திற்குரிய பாசங்களாகின்றன என்பது மிக அவசியமாகக் அறிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

ஒரு தாய்க்குப் பிள்ளை எப்போதும் குழந்தைதான் என்பது உணர்வு பூர்வமான கணிப்பாக அமைய வேண்டுமேயன்றி அதன் செயற்பாடுகளைக் குழந்தைத்தனமாக வைத்திருப்பதற்கு வழிவகுக்கக்கூடாது. ஒரு குழந்தையின் உடலியல், உளவியல் வளர்ச்சிக்கு ஏற்ப அக்குழந்தையின் தாயின் செயற்பாடுகளும் அடுத்தடுத்த படி முறைகளுக்கு ஊக்கமளிப்பதாக அமைவது தவிர்க்கப்படக்கூடாது. ஏனெனில் ஒரு



குழந்தை அதன் தாயுடனான உணர்வு பூர்வமான தொடர்புடன் தனது வாழ்க்கையை ஆரம்பித்துப் படிப்படியாகத் தன்னையும் தனது தேவைகளையும் அறியக்கூடிய நிலைக்கு வரும்போது தாயும் தனது ஒரு தலைப்பட்சமான தீர்மானத்தைத் தவிர்த்து குழந்தையின் உணர்வுகளுக்கேற்பத் தனது செயற்பாடுகளை மாற்றியமைக்காவிடின் வயதால் அதிகமாகவும் நடத்தைகளால் குழந்தைகளாகவும் அமைகின்ற தாழ்வு மனப்பான்மையும் தன்னம்பிக்கையுமற்ற குழந்தைகளை உருவாக்குவதாக அமைவது தவிர்க்க முடியாததாகும். இவ்வாறான குழந்தைகளை உருவாக்கும் தாய்ப்பாசம் உண்மையில் பரிதாபத்துக்குரிய பாசம் என்பதை ஒவ்வொரு தாயும் காலப்போக்கில் உணர்கின்றார்கள் என்பது நான் அனுபவரீதியாகக் கண்ட உண்மை.

ஒரு தாய் தன்னை உருக்கித் தன்பிள்ளைச் செல்வத்தை வளர்க்கும் போது அந்தப் பிள்ளையின் எதிர்காலத்திற்கான ஒவ்வொரு செயற்பாட்டிலும் முழுமையான பங்கைச் செலுத்த வேண்டும். ஒரு குழந்தை படிப்படியாக அடுத்த நிலைக்குத்தன்னை எடுத்துச் செல்ல முயற்சிக்கும் போது தாய்ப்பாசத்தை விலங்காக்கி அதன் கால்களைக் கட்டித் தடுக்காமல் தாய்ப்பாசத்தைப் புதிய சுவடுகளாக்கி முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு தாயும் உணர்ந்து கொள்வது மட்டுமல்ல ஒரு முன்மாதிரியாகவும் (Row Model) செயற்படுவதும் அவசியம்.

துரதிஷ்டவசமாக, குறிப்பாக இந்த நாட்டில் வாழுகின்ற பெரும்பாலான தாய்மார்கள் தமது குழந்தைகளின் உடலியல், உளவியல், சமூக மாற்றங்களைக் கவனத்திற்குகொள்ளாமல் பாசம் என்ற வலைக்குள் அவர்களைச் சிக்கவைத்து அவர்களால் நிறைவேற்றக் கூடிய நாளாந்த நடவடிக்கைகளை செய்வதற்கான வாய்ப்பையும் ஊக்குவிப்பையும் கொடுக்காமல் அவர்களே செய்கின்றார்கள். எத்தனையோ தாய்மார்கள் தமது குழந்தைகள் பத்து வயதடைந்த பின்னரும் கூட உணவை ஊட்டினால் தான் குழந்தை சாப்பிடும் என்ற நிலைக்கு உருவாக்கிவிட்டு தாழ்வு மனப்பான்மையும், தன்னம்பிகையுமற்ற குழந்தைகளாகி விட்டார்களே என்று கவலைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தாய்ப்பாசம் தன்னிகரற்றது. ஆனால் அது பரிதாபத்துக்குரிய பாசமாக அமையக்கூடாது. ஒரு குழந்தை அதன் வளர்ச்சிப்படிமுறையில் எதையெதைச் செய்வதற்கான தகுதியைப் பெறுகிறதோ அதையதை அக்குழந்தையே செய்தல் வேண்டும். அதற்கான ஊக்குவிப்பதாகத் தாய்ப் பாசம் அமைவது அவசியம். மாறாக ஒரு குழந்தையின் செயற்பாடுகளை மழுங்கடிக்கும் தாய்ப்பாசம் அக்குழந்தையின் எதிர்காலத்தை நிகழ்காலத்தில் கொன்றுவிடுகின்றது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக ஒரு தாய்ப்பறவை அதன் குஞ்சு தானாகவே உணவு தேடும் தகுதியைப் பெற்ற பின்னரும் அதற்கு வாய்ப்பளிக்காமல் தனது இறக்கைக்குள் வைத்து உணவூட்டுமாயின் அந்தக் குஞ்சுகள் நிலையை எண்ணிப்பாருங்கள். நடைமுறையில் தன்குஞ்சு உணவு தேடும் தகைமையைப் பெற்றவுடன் தாய்ப்பறவை அதை நெறிப்படுத்தி, தன்னம்பிக்கையை உருவாக்கி எதிர் காலத்துக்கு அனுப்புவதைப் பார்க்கின்றோம். பறவைகளும், விலங்குகளும் இதை உணர்ந்து செயற்படும்போது நமக்கு ஏன் இந்தத் தடுமாற்றம்? இந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம் தாயின் தவறான மன உணர்வே?

**ஆம் வாசகர்களே!**

தன்னிகரற்ற தாய்ப்பாசம் குழந்தைகளின் எதிர்காலத்தை நிகழ் காலத்தில் அழிக்கும் பரிதாபத்துக்குரிய பாசமாக அமையாமல் இருப்பதற்கு ஒவ்வொரு தாயும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் ஒரு தாய்க்கு தன்பிள்ளை எப்போதும் உணர்வால் மட்டுமே குழந்தை அதன் செயற்பாடுகளால் அல்ல. எனவே தாய்ப்பாசம் குளந்தைகளின் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக அமையாமல் படிக்கல்லாக அமையட்டும்.

**KG Master**
416.725.5112



**கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை**
**Education = Intelligence + Character**



**KG Master**
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 9 to 17 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*

# மூட்டு வலிகளை முறியடிக்க முத்தான யோகாசன சிகிச்சைகள்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

மூட்டுவலி என்றால் என்ன? மனிதருக்கு எப்படி அது வந்து சேர்கிறது. அதன் துன்பத்திலிருந்து எவ்வாறு விடுபடுவது என்பவற்றைப்பற்றி சுருக்கமாக ஆராய்ந்திருந்தோம். எனவே இந்த இதழில் பல்வேறுபட்ட மூட்டுடன் தொடர்புடைய சகல உடல் வலிகளுக்கும் யோக சிகிச்சை முறையில் நிரந்தரமாகத் தீர்வு காணும்முறைகள் பற்றி சுருக்கமான விளக்கத்தைப்பற்றி ஒரு கண்ணோட்டம்.

கீழ்வரும் யோகாசனப்பயிற்சிகளை தினமும் 20நிமிட நேரமாவது பயிற்சி செய்து வந்தால் மூட்டுவலி வயதான காலத்திலும் எந்த வகையிலும் வராது என்பது உறுதியாகும்.

### உட்கட்டாசனம்

நேராக இரண்டு கால்கள் இணைப்பில் ஓரடி இடம் இருக்குமாறு கால்களை அகலமாக வைத்து நில்லுங்கள். பின்இரண்டு கைகளையும் முன்புறமாக நேராக நீட்டுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை, உடம்பு முழுவதையும் இறுக்கமாக அல்லாமல் தளர்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். பாதி உடல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருப்பது போல எவ்வளவு நேரம் உங்களால் அவ்வாறு உட்கார முடியுமோ அவ்வளவு நேரம் இருக்க வேண்டும். அப்போது கால் மூட்டில் அதாவது முழங்கால் இணைப்பில் இலேசமாக வலி ஏற்படும். அப்போது உட்கார்ந்து கொள்ளுங்கள். இதுதான் உட்கட்டாசனம்.

### ஆசனத்தின் பலன்கள்

உட்கட்டாசனத்தை முதலில் செய்வதால் உடலிலுள்ள நாடி நரம்புகளெல்லாம் இளகி இனம்புரியாத சுகத்தைத் தரும். அடிவயிறு, தொடைப்பகுதி தளர்ந்து கொடுக்கும். மற்ற உடற்பயிற்சிகள் செய்வதற்கு உடலானது இலகுவாக இருக்கும். கால் மூட்டு வீக்கம், மூட்டுகளில் நீர்தேக்கம், வலிகள், வாதங்கள் எல்லாம் நீங்கும். இந்த ஆசனத்தின் சிறப்புப் பலன் என்னவென்றால் காலையில் எழுந்து ஐந்து மைல் தூரம் நடந்து வந்தால் என்னபலன் கிடைக்குமோ அவை முழுக்க இதில் கிடைக்கும். இப்படிப்பட்ட அருமையான ஆசனத்தை காலையில் ஒரேயொரு தடவை செய்தால் முழங்கால்களிலோ கணுக்கால்களிலோ எந்த வலியும் வரவாய்ப்பில்லை.

### பாத ஹஸ்த ஆசனம் (head Knee pose)

பாதங்களைச் சேர்த்து நிமிர்ந்து நிற்கவும். மூச்சை வெளியே விட்டபடி உடலைத் தளர்த்தி குனிந்து கைகளால் கால்களின்




புஜங்காசனம்

பெருவிரலை பிடித்துக் கொள்ளவும். முழங்கால் சிறிதும் வளையக்கூடாது. கால்களை விறைப்பாக வைத்துக் கொள்ளவும். முகத்தை முழங்காலை நோக்கி அணுகச் செய்யவும். ஆரம்பத்தில் இது கஷ்டமாக இருக்கும். தொடர்ந்து பயிற்சி செய்யும்போது முகத்தை முழங்கால்களுக்கிடையில் கொண்டுவரமுடியும். இதனை ஒரு முறைக்கு 15வினாடியாக மூன்று தடவை செய்யவும்.

### ஆசனத்தின பலன்கள்

வாதப் பிடிப்புகளுக்கு முழுமையான தீர்வைத் தரும். மூட்டு வலிகள் நீங்கும். ஆதரைடிஸ் (Arthritis) என்ற இரத்தக்கட்டி நோயால் உருவான மூட்டு வலியாக இருந்தால் அந்த வலியை நீக்கும் சக்தியுடைய ஆசனம் இது.

### திரிகோண ஆசனம் (Tringle)

கால்கள் இரண்டையும் அகட்டி நின்றுகொண்டு இருகைகளையும் பக்கவாட்டில் சரியும்போது ஒன்றைத் தலைக்கு மேல் உயர்த்தியும் மற்றையதைப் பாதத்தை நோக்கயும் சரிக்க வேண்டும். மூச்சை வெளியில் விட்டவாறு இடதுபக்கம் உடல் வளையும் போது இடது கை இடது பாதத்தின் பெருவிரலைத் தொடும் படியும் தலையை மேலே திருப்பி கண்கள் இடது கைப் பெருவிரலைப் பார்க்கும்படி நிற்க வேண்டும். பின் மெதுவாக நேராக நிமிர்ந்து வலது பக்கம் திரும்பி வலது கால் பெருவிரலை வலது கையால் தொடும்படி நின்று மெதுவாக நிமிர வேண்டும். ஒருமுறைக்கு இரண்டுவினாடியாக மூன்றுமுதல் ஐந்துமுறை செய்யவேண்டும். இப்படி செய்யும்போது கால்மூட்டுகளை மட்டும் வளைய விடக்கூடாது.

### ஆசனத்தின் பலன்

இந்த ஆசனத்தை செய்யும்போது மூட்டுவலி முழங்காலில் வராதபடி கால் இணைப்பை நேராகவே நிமிர வைத்து இணைப்புகளை சிறிது சிறிதாக இயக்கும்போது மூட்டுவலி இருந்தாலும் சரி அந்த வலியை இந்த ஆசனம் நீக்கிவிடும். அதனால் மூட்டுவலியை நீக்கவல்ல மிகச்சிறந்த ஆசனங்களில் இதுவும் ஒன்று. அத்துடன் உடலிலுள்ள அத்தனை மூட்டுகளிலுள்ள மூட்டு வலிகளுக்கும் பொதுவான சிகிச்சை முறையாக இது அமைகிறது.

### புஜங்காசனம்

தரையில் குப்புறப்படுத்துக்கொள்ளவும். இரண்டு கைகளையும் இரண்டு காதுகளுக்கு நேராக தரையில் பொத்தியபடி வைத்துக்கொண்டு தலையை மட்டும் பாம்புபோல முடிந்தவரை மெதுவாகத் தூக்கி கழுத்துக்குப் பின்புறமாக வளைக்கவேண்டும். இதை செய்யும்போது மூச்சைச் சாதாரணமாகவே விட வேண்டும் பின்பின்புறம் வளைந்த கழுத்தை மெதுவாகத் திரும்பி தலையை இறக்கவேண்டும்.

இவ்வாறு ஒருமுறை இந்த ஆசனத்தைச் செய்ய ஐந்து வினாடியே போதும். இவ்வாறு ஒரு நாள் இரண்டு தடவையாவது இதனைச் செய்து வரவும். இந்த ஆசனத்திற்கு ஏன் புஜங்காசனமென்று பெயர் வந்தது. தலையைப் பாம்புபோல பின்புறமாக மெதுவாக வளைப்பதனாலேயே இதனை புஜங்காசனம் என்கின்றனர்.

### ஆசனத்தின் பலன்கள்

இந்த ஆசனம் வயிற்றின் தசைகளை இழுக்கின்றது. அப்போது அங்கே பாயும் இரத்த ஓட்டம் முழங்கால் இணைப்புக்கும் பரவுகின்றது. அதனால் உடலிலுள்ள சகல மூட்டுகளும் பலம் பெறுகின்றன.

குறிப்பு - மேற்குறிப்பிட்ட ஆசனப்பயிற்சிகளை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் முறைப்படி பழகி வந்தால் ஒரு சில வாரங்களிலே முழுமையான பலன்களை அடைவது உறுதி. மூட்டுவலிகளுக்கு நிரந்தரமாக முடிவு கட்டலாம்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
416.289.2033 after 7:00pm



SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL
Excellent Quality - Low Cost Training
Truck licence A-Z
From $599.00
In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book



• A-Z & D-Z up grade • One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
• வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake
Fork Lift licence
From $75.00
சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan
416.913.9574/416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



கனவுகள் நனவாகும்
நினைப்பதை விட நீங்கள் பெரிய பணக்காரர்.
எப்படி என்று ஸ்கோஷியா வங்கியில்
பெரி. முத்துராமனிடம் கேளுங்கள்.

• முதல் தரம் வீடு வாங்குகிறீர்களா?
• சொந்தப்பணம் போடாமல் 100 சதவீதம் கடனில் வீடு வாங்க வேண்டுமா?
• கடன்களை ஒன்றாக்கி டாலரை மிச்சப்படுத்த வேண்டுமா?
• வீட்டுக்கடனை அபராதம் இன்றி இலவசமாக மாற்ற வேண்டுமா?
• வீட்டுக்கடனுக்குச் செலுத்திய பணத்தை திரும்பவும் குறைந்த வட்டியில் பெற வேண்டுமா?
• குறைந்த வட்டியில் சிறந்த வீட்டுக்கடன் வேண்டுமா?
• உங்கள் சேமிப்புக்களுக்கு வங்கி வட்டியை விட அதிக லாபம் பெற்றிட வேண்டுமா?
• சேமிப்புகளை வரி இல்லாமல் விரைவாகப் பெருக்கிட வேண்டுமா?

உங்களை சூழ்நிலைக்கேற்ற இலவச ஆலோசனை பெற அழையுங்கள்
பெரி. முத்துராமன்
ஸ்கோஸியா பாங்
416.439.3040 Ext. 2008
Scotiabank
Life, Money, Balance both.

# “கிணற்றுத் தவளைகள் தண்ணீரை விட்டு வெளியே வரும்”

## நேர்காணல் : டிராட்ஸ்கி மருது

சென்னை, நந்தனத்தில் உள்ள பிரபலமான அபார்ட்மெண்டின் மூன்றாவது தளம்...ஓவியர் மருதுவின் இல்லம் கலகலப்பாக இருக்கிறது. அபார்ட்மெண்ட் நண்பர்கள் ஒவ்வொருவராக வந்து பார்த்து வாழ்த்திவிட்டுச் செல்கிறார்கள். தொடர்ந்து சிணுங்கிக்கொண்டே இருந்த தொலைப்பேசியில் மாறி, மாறி மருதுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. எல்லாவற்றுக்கும் பொறுமையாக “நன்றி” சொல்கிறார். வாழ்த்துகளுக்கு காரணம்... மருதுவுக்கு முந்தின தினம் அறிவிக்கப்பட்ட தமிழக அரசின் கலைமாமணி விருது! தமிழ் சினிமா கிராபிக்ஸ் கலைஞர்களில் மிக முக்கியமானவர் ஓவியர் மருது. இயக்குநர் ராமநாராயணனின் பெரும்பாலான படங்களுக்கு கிராபிக்ஸ் செய்துள்ளவர் மருதுதான். நடிகர் நாசர் இயக்கி, நடித்த “தேவதை” திரைப்படத்திலும் முக்கிய பங்காற்றியுள்ளார் மருது. “விளம்பரம்” பத்திரிகைக்காக மருதுவைச் சந்தித்தோம்.

முதலில் “விளம்பரம்” சார்பாக, கலைமாமணி விருதுக்கு வாழ்த்துகள்.

மருது: நன்றி.

தமிழ் சினிமா விரைவில் டிஜிட்டல்மயமாகிவிடும் என கடந்த நான்கைந்து வருடங்களாகவே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் சினிமா டிஜிட்டல்மயமானால் தமிழ் சினிமாவுக்கு அதிகமாக என்ன மாதிரியான அனுகூலங்கள் கிடைக்கும் என நினைக்கிறீர்கள்?

**சந்திப்பு: கிருஷ்ணா**

மருது: உலகில் எல்லா மொழிகளிலும் சினிமாவுக்கு என்ன என்ன அனுகூலங்கள் கிடைக்குமோ அவை அனைத்தும் தமிழ் சினிமாவுக்கும் கிடைக்கும். “டிஜிட்டல் சினிமா”, திரைப்படத்துறையை 35mm வடிவத்திலிருந்து “Wire less” வடிவத்துக்கு அழைத்துச் செல்லும். இதனால் நமது கிராமங்களில் உள்ள டாக்கீஸ்களிலும் கூட துல்லியமான படத் தொகுப்பும், தரமான ஒலி அமைப்பும் கொண்ட படங்களைக் காணமுடியும். காலப்போக்கில் தியேட்டருக்கு ஒன்று என்று தனித்தனி பிரதிகள் போட அவசியம் இல்லாத நிலை உருவாகும். இதனால் திரைப்படத் தயாரிப்பு செலவு பெருமளவில் குறையும். ஒரு தியேட்டரில் திரையிடுவதற்கும், நூற்றுக்கணக்கான தியேட்டரில் திரையிடுவதற்கும் இடையே செலவில் பெரிய வித்தியாசமிருக்காது. திரைப்படத் தயாரிப்பில் பிலிம் சுருள் தேவையில்லை என்று ஆகிவிடும். இதனால் ஹொலிவூட்டில் மட்டும் வருடத்துக்கு 900 கோடி ரூபாய் மிச்சப்படுத்தப் படும் என்று சொல்கிறார்கள் என்றால், உலகம் முழுவதும் கணக்கிட்டால் எவ்வளவு வரும் யோசித்துப் பாருங்கள். சினிமாவில் இதற்கு முன்பிருந்த அணுகுமுறைகள் எல்லாம் இன்னும் சுலபமாகி விடும். இரட்டைப் பரிமாணமுடைய ஒரு படத்திற்குள் கலர் உட்பட எதை வேண்டுமானாலும் நீங்கள் நிர்ணயம் பண்ணலாம்.

360 டிகிரி உலகத்தில் ஒரு மனிதன் மிதந்து போவதுபோல் சூட் பண்ண, இப்போது முடியாது. இனி ஒரு மனிதனை ஸ்கேன் செய்து, இன்னொருத்தரை நடிக்க செய்து, அவருடைய திறமையை ஸ்கேன் செய்யப்பட்டவருக்குக் கொடுப்பதன் மூலம் இதைச் செய்ய முடியும் என்றாகும். 'Spider Man', 'Man in Block' போன்ற படங்கள் இம்முறையில்தான் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழில், “பாளையத்து அம்மன்” படத்தில் நடிகை மீனாவைப் போல் ஒரு சிற்பம் செய்தோம். வேறு ஒரு பெண்ணை நடனமாடச் செய்து, அந்த இமேஜை சிற்பத்துக்குக் கொடுத்தோம். அதுபோல், ஆடு, மாடு, யானைகளை சினிமாவில் நடிக்கச் செய்வதற்காக சிரமப்படுத்த தேவையில்லை. “சாப்ட்வேர்கள்” உருவாக்கித் தரும் தத்ரூபமான யானைகள் நிஜ யானைகள் போலவே சொன்ன மாதிரியெல்லாம் நடிக்கும். இப்போதே, அப்படி சில திரைப்படங்கள் வருகின்றன. மிருகவதைத் தடைச்சட்டத்தில் சிக்கி “இம்சை அரசன் 23-ம் புலிகேசி” வெளியாகச் சிரமப்பட்டது போன்ற பிரச்சினைகள் இருக்காது



இப்போது, டிஜிட்டல் கேமிராவின் பயன்பாடு தமிழகத்தில் முழுமையாக வந்துவிட்டது. அதன் விளைவால் சின்ன, சின்ன குக்கிராமத்தில் இருந்தெல்லாம் ஆவணப்படங்கள், குறும் படங்களைத் தயாரிக்கிறார்கள். சிறுபத்திரிகை இயக்கம் மாதிரி, ஆவணப்படம் என்பது ஓர் இயக்கமாக தமிழகத்தில் இன்று உருவாகி வருகிறது. டிஜிட்டல் சினிமா யுகத்தில் தீவிரமான மாற்று சினிமாக்கள் தமிழ்நாட்டில் இருந்து நிறைய வர வாய்ப்புகள் உள்ளன.

ஒரு ஓவியராக உங்களுக்கு “டிஜிட்டல்” சினிமா, என்ன விதமான அனுகூலங்களையும், சவால்களையும் தரும் என்று நினைக்கிறீர்கள்?

மருது: புகைப்படக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட போது, அதை அதிகம் பயன்படுத்தியவர்கள் ஓவியர்கள்தான். ஓவியத்தில் இல்லாத புகைப்படக் கலையின் சில தன்மைகளை பரிசோதனை முயற்சியாக ஓவியத்துக்குள் கொண்டு வந்தார்கள். அதுபோல் புகைப்படக் கலைஞர்களும் ஓவியத்தின் தன்மைகளைப் புகைப்படங்களுக்குள் கொண்டுவந்து சோதனை முயற்சிகளில் ஈடுபட்டார்கள். பிறகு “மூவி கேமரா” வந்தது. சினிமா ஒரு கலையாக வளர்ந்தது. ஓவியமும், சினிமாவும் இணைந்தது. “அனிமேஷன்” என்று புதிய ஒரு புதிய கலை உருவானது. நான் ஓவியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், “அனிமேஷன்” எனக்கு ஒரு கனவாக இருந்தது. அப்புறமுள்ள இந்த இருபது வருட காலத்தில், நான் மனதால் செய்து கொண்டிருந்ததை இப்போது “டிஜிட்டல் மீடியம்” என் கையில் எடுத்து தந்துவிடப் போகிறது.

ஒரு வரையறுக்கப்பட்ட வெளிக்குள் நிகழும் நிறங்கள், கோடுகள், வடிவம், வெளிச்சம்... எல்லாவற்றினுடைய விளையாட்டுதான் ஓவியம். ஒரு பெண், பின்புலமாக இருக்கும் கருவானம், பக்கத்தில் வண்ணத்துப்பூச்சி என்றிருக்கும் ஓவியத்தை வரையும் ஓவியன், இவை எல்லாவற்றையும் ஒரு சேரப் பார்த்து, அந்த ஓவியத்தை வரையவில்லை. வெவ்வேறு தினங்களில் பார்த்த கருவானத்தையும் பெண்ணையும், வண்ணத்துப் பூச்சியையும் சேர்த்து, ஓர் ஓவியத்தை வரைகிறார். ஓவியத்தில் சாத்தியமான இது, இனிமேல் பல்வேறு விதங்களில் சினிமாவிலும் சாத்தியமாகும்.

வரிசையாக சுற்றி நிறுத்தப்பட்டிருக்கும் “ஸ்டில்” காமிராக்களால் ஒரு கண நேரத்திற்கு கீழ் நோக்கி ஊற்றப்பட்ட தண்ணீரை அப்படியே அந்தரத்தில் நிற்கும்படி எடுக்க முடியும். இதற்கு Time slice Photography என்று பெயர். “Matrix” படத்தில் இந்த நுட்பத்தைப் பயன்படுத்தியிருக் கிறார்கள். அதில் ஒரு காட்சி, துப்பாக்கியிலிருந்து பாயும் குண்டு நடிகன் குனியும் போது அவனைத் தாண்டிப் போகும். இதை 360 டிகிரியில் எல்லா பக்கத்திலுமிருந்தும் காண்பிக்கிறார்கள். இந்தக் காட்சி நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தமிழில் “பாய்ஸ்” திரைப்படத்தில் ஒரு பாடல் காட்சியில் சில இடங்களில் இந்த உத்தியைப் பயன்படுத்தி இருந்தார்கள்.

155 ஆண்டுகளில் புகைப்படக் கலைக்கு என்று ஒரு தன்மை உருவாகி வந்திருக்கிறது. 100 ஆண்டுகளில் சினிமா ஒரு தன்மைக்கு வந்துவிட்டது. ஓவியத்துக்கு எப்போதுமே ஒரு தன்மை இருக்கிறது. எல்லாம் இப்போது ஒரு புள்ளியில் இணைகிறது. ஒரு திரைப்படக் காட்சியில் ஓவியத்தின் தன்மையை உருவாக்கலாம். சினிமா ஒளிப்பதிவாளரின் சில உத்திகளை உபயோகப்படுத்திக் கொண்டே, தொடர்ந்து நான் ஓவியனாகவும் இருக்கலாம். ஆனால், என்னுடைய படம் நகரும்.

வர்த்தக ரீதியாக தமிழ் சினிமாவில் என்ன மாற்றம் வரும். ஹீரோக்களை மையமிட்டிருக்கும் சினிமா மாற்றமடைய வாய்ப்பிருக்குமா?

மருது: இப்போதிருக்கும் “ஸ்டார் சிஸ்டம்” கலைந்து, காலப்போக்கில் புதுவிதமான “ஸ்டார் சிஸ்டம்” உருவாகலாம் என்று தோன்றுகிறது. “ஸ்பைடர் மேன்” போன்ற அமானுஷ்ய சக்திகள் கொண்ட ஒரு கிராபிக்ஸ் மனிதனுடன், முன்னணி நடிகனுக்கு மோதவேண்டி வரும். “ஸ்பைடர் மேன்” செய்யும் காரியங்களை இவனால் செய்யமுடியாது.
அப்படிச் செய்து, அது படமாக வந்தால், அது கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என்பது சுலபமாகத் தெரிந்துவிடும். கிராபிக்ஸ் நடிகனுக்கு சம்பளம் கொடுக்க வேண்டாம் எனும் போது செலவும் பெருமளவு குறைந்து விடுகிறது. மேலும் ஏற்கனவே குறிப்பட்டது போல், படச் சுருள் தேவையில்லை என்பதால் மொத்த தயாரிப்பு செலவில் முப்பது சதவீதம் மிச்சமாகிறது. நடிகர்கள் மற்றும் படச்சுருளுக்கான செலவு சதவீதத்தைக் கழித்து விட்டால், மிகக் குறைவான முதலீட்டிலேயே ஒரு படத்தை எடுத்துவிட முடியும் என்னும் நிலை உருவாகும். இது வர்த்தக ரீதியாக மிகப் பெரிய புரட்சியை உருவாக்கும் என்றே நினைக்கிறேன்.

ஆனால், சினிமா கிராபிக்ஸ் காட்சிகளை அதிகம் சார்ந்திருந்தால் காட்சியின் இயல்புத் தன்மை பாதிக்கப்படாதா?

மருது: மக்கள் நூறு வருட சினிமா சரித்திரத்தில் இதுதான் இயல்பானது என்று பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இதில் காலப்போக்கில் மாற்றம் வரும். என்னுடைய ஓவியங்கள் ஆரம்பத்தில் “ஆனந்த விகடன்”, “குமுதம்” போன்ற வெகுஜன பத்திரிகைகளில் வந்தபோது, “என்னய்யா வரைகிறான் இவன்” என்றுதான் பார்த்தார்கள். இப்போது பழகிவிட்டது. அதுபோல் “டிஜிட்டல்” பிம்பங்களும் பழகிவிடும். ஒரு வெள்ளைக் குதிரை இடதுபக்கம் இருந்து வருகிறது. அடுத்த காட்சியில் வலதுபக்கம் இருந்து ஒரு பெண் வருகிறாள் அடுத்த காட்சியில் வெள்ளைக் குதிரைப் பக்கத்தில் பெண் வந்து நிற்கப் போகிறாள் என நாம் இப்போது சுலபமாக ஊகித்து விடுகிறோம். இப்படியே காட்சி ரூபங்களைக் கொண்டு ஒரு கதை நகர்த்தப்படுகிறது. இப்படித்தான் மொழியற்ற ஒன்றிலிருந்து ஒரு மொழி உருவாக்கப்பட்டு, அது சினிமா மொழி என்று ஆகிவிட்டது. இப்போது ஏற்கனவே சொன்னது போல், ஒரு சம்பவத்தை 360 டிகிரியிலுமிருந்து பதிவு செய்வது சாத்தியம் என்று ஆகும் போது யாதார்த்தம் இன்னும் தத்ருபமானதாக இருக்கும். இதனால் சினிமா மொழியை ஒரு கலைஞன், அவனுடைய கற்பனை உயரத்தில் பயன்படுத்து வதுக்கு டிஜிட்டல் மீடியத்தில் வகை ஏற்படும்.

மண்ணை சார்ந்த கதைகளைச் சொல்லும் உத்தியிலும் டிஜிட்டல் சினிமா நுழைந்து மண்ணின் வாசனையை மற்றுமொரு உயரத்திற்கு எடுத்துச் செல்லும். அதுதான் அடுத்த கட்டம். “கட் அவுட்” மனிதர்களைக் கொண்டே ஒரு படம் செய்திருக்கிறார்கள். அது ஒரு முப்பரிமாண உலகம். ஆனால், எல்லோரும் தட்டையானவர்கள். இது உருவாக்கும் மனஉணர்வு தனித்துவமானது. இது வார்த்தைகளுக்கு அடைபடாத ஒரு பிரமாதமான அனுபவத்துக்குள் நம்மைக் கொண்டு செல்கிறது. “Star Wars” படம் வந்த போது, இந்தப் படம் உலக சினிமாவின் சரித்திரத்தையே மாற்றப் போகிறது என்று சொன்னேன். அப்போது “உனக்கு காமிக்ஸ் பிடிக்கும் என்பதால் இப்படிச் சொல்கிறாய்” என்று சென்னை ஓவியக் கல்லூரி நண்பர்களும் திரைப்படத்துறை நண்பர்களும் சொன்னார்கள். நான் ஊகித்தது இப்போது நடக்கப்போகிறது. அப்போது, கிணற்றுத் தவளைகள் தண்ணீரைவிட்டு வெளியே வந்துதான் ஆகவேண்டும்.

# தாய்மடி சொர்க்கம்

ஆக்கம் அருட்கவி ஞானகணேசன்

பல்லவி

பத்துமாதம் சுமந்தெடுத்துப் பத்தியங்கள் பார்த்துநின்று
முத்துப்போல பெற்றெடுத்த சொத்து அன்றோ எந்தன் அன்னை

அனுபல்லவி

கண்ணுக்குள்ளே என்னைவைத்து கனவுகளில் அவள்மிதந்து
பொன்னெனவே புகழ்ந்துபாடும் பண்புருவே எந்தன் அன்னை

சரணம்

துள்ளியானும் ஓடவே அள்ளியென்னை அணைத்தெடுப்பாள்
பள்ளிசெல்லும் போதும் எந்தன் பாதையையே பார்த்திருப்பாள்
கனிவினிலே விளையாடிக் களித்திருக்கவைத் தெனக்குக்
கவளம் கவளமாகத் தீத்தி கனிவுடனே புடைக்கவைப்பாள்

எழுத்தினிலே உயிர் அகரம் எந்தன் வாழ்வில் தாய் அகரம்
அளித்தளித்து எழுதவைக்கும் அன்னையவள் முதற்தெய்வம்
வேண்டுவார் வேண்டுவதை ஈவோன்தான் இறைவனென்றால்
வேண்டுமுன்பே விரும்பியவை ஈபவள் இறை மேலன்றோ

நற்பழக்கம் புகட்டிடுவாள் நல்லவற்றை எடுத்துரைப்பாள்
கற்றவற்றை மீட்டிடவே வீட்டிலெந்தன் குருவாவாள்
தந்தையுடன் தான் சமனாய் நானுயரப் பாடுபடும்
எந்தனுயிர் தாய்மடியே என்வாழ்வில் சொர்க்கமன்றோ.



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers - 202 May 01, 07

1) Let there be x dime and Y quarters
Then

| | | | |
|---|---|---|---|
| | 10x + 25y | = 1360 | ———(I) |
| | x + y | = 97 | ———(II) |
| (11) x 25 | 25x + 25y | = 2425 | ———(III) |
| | 10x + 25y | = 1360 | ———(II) |
| | 15x | = 1065 | |
| | x= 71, | No. of dimes= 71 | |

2. Rewrite 97/19 as 5 + 2/19 = 5 + 1/(19/2)
By comparison w = 5, x = 9 and y = 2 Thus w + x + y = 16

3) Since 25 is the sum of two squares, the only possible values for x are 0, 3, 4 & 5. Substituting each value of x into the equations and finding the co-responding value of y gives five different values for y1 Answer 5.

4) By multiplying the given equations together we obtain
(x2yz3) (xy2) = (74) (75) x3y3z3 = 79 .: xyz = 73

5) Multiplying the given equations together gives
(x2yz3) (xy2) = (73) (79) x3y3z3 = 712 xyz = 74

## Tutorial - 203 May 15, 07

1. The digits 1,2,3,4 can be arranged to form twenty - four different four - digit numbers.If these twenty-four numbers are then listed from the smallest to largest in what position is 3142 ? [Gr. 9]

2. In a convex polygon, exactly five of the interior angles are obtuse. What is the largest number of sides, for this polygon [Gr. 10]

3.The first term in a sequence of numbers is t1 = 5. Succeeding terms are defined by the statement tn - tn - 1 = 2n + 3 for n ≥ 2.
Find the value of t50 [Gr. 11]

4. Suppose that f(5) = 1, f1(5) = 6, g (5) = -3 and g1(5) = 2.
Find the following values a) (fg)1 (5) (b) (f/g)1 (5)
(c) (g/f)1 (5) [Gr. 12]

5. If f(x) = ex g(x) Where g(0) = 2 and g1(0) = 5. Find f1 (0).

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774**


## MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC Special classes in Calculus & Algebra - Geometry English for all grades from Gr. 2 to Gr. 10 Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

**CONTACT: 416 - 431- 6774** (Markham & Ellesmere)




## யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**


# மாமல்லபுரம்

*13ஆம் பக்கத்தொடர்ச்சி*

வழிகாட்டிகள். அகன்று உயர்ந்த பாறையில் பல்வேறு புராண இதிகாசக் கதைகள் சிற்ப வடிவில் செதுக்கப்பட்டுள்ளன. இயற்கையாக பாறையில் உள்ள இடைவெளியை வானத்தில் இருந்து விழும் கங்கையாகச் சித்தரித்து, அதன் கரையில் கையை உயர்த்திய வண்ணம் காலைத் தூக்கி கடுந்தவம் புரியும் பார்த்தனுக்கு பாசுபதம் வழங்கும் பரமனைப் படைத்துள்ள உயிரோட்டமான காட்சியை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே எங்களை மெய்மறந்து நின்றோம். இதில் இருபுறங்களிலும் தெய்வங்கள், குட்டி தேவதைகள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், அன்றாடப் பொருள்கள் எல்லாம் செதுக்கப்பட்டுள்ளன. எங்கள் கண்களுக்கு விருந்தாக அமைந்த இது ஓர் அரிய கலைப் படைப்பு இது என்பதில் சந்தேகமேயில்லை.

பகீரதன் தவச் சிற்பத்துக்கு அடுத்து நாங்கள் சென்றது குடவரைக் கோயில்கள். மொத்தம் ஒன்பது குடவரைக் கோயில்கள் உள்ளன. அதில் மகிஷாசுரமர்த்தினி கோயிலும், விஷ்ணு கோயிலும்தான் மிகச் சிறப்பானவை. மகிஷாசுரமர்த்தினி சிற்பத்தின் அழகையும் நுட்பத்தையும் வார்த்தைகளில் வர்ணித்துவிட முடியாது. அது பார்த்து அனுபவிக்க வேண்டியது. அவ்வளவு எழில்! மகிடாசுரனை வதம் செய்ய வரும் மகிஷாசுரமர்த்தினிக்கு பத்துத் திருக்கரங்கள். பத்திலும் பல்வேறு ஆயுதங்கள் தாங்கி, சிங்கத்தில் உட்கார்ந்து காட்சிதரும் அவள் வீரத்திருமுகம்... ஆஹா. சுற்றிலும் வாள் முதலிய ஆயுதங்களை ஏந்தியபடி பூதகணங்கள் காணப்படுகின்றன. எருமைத் தலைகொண்ட மகிடாசுரன் கதாயுதத்துடன் எதிர்கொண்டு நிற்கிறான். இரண்டு படைகளும் மோதுகின்ற காட்சி உயிர்துடிப்புடன் உள்ளது. இந்த சிற்பத்துக்கு எதிரில் உள்ள பாம்பனையில் பள்ளிக்கொண்ட பரமன் திருக்கோலம் மிக்க எழிலுடன் விளங்குகிறது.

அடுத்ததாக, தலசயனப்பெருமாள் கோயில் சென்றோம். மாமல்லபுரம் பேரூந்து நிலையத்துக்கு அருகே உள்ளது இக்கோயில். சந்திரகிரியை



ஆட்சிசெய்த விஜய நகர மன்னர்களால் உருவாக்கப்பட்டது இக்கோயில் என்கின்றன இங்குள்ள கல்வெட்டுகள். மிகப் பழங்காலத்தைச் சேர்ந்த கோயிலாக இருந்தாலும் இப்போதும் பக்தர்கள் வந்து வழிபடும் புழக்கத்தத்தில் உள்ள கோயிலாகவே உள்ளது. பெருமாள் சயனத் திருக்கோலத்தில் காட்சியளிப்பதால் தலசயனப் பெருமாள் கோயில் எனப் பெயர் பெற்றதாம்.

